குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] சோபகிருது ஆண்டு பங்குனித் திங்கள் 10—4—64 [இதழ்



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

அன்புமிக உண்டாய்
அதிலே விவேகமுண்டாய்த்
துன்ப வினையைத்
துடைப்பதுண்டாய் – இன்பம்
தரும்பூ ரணத்துக்கே
தாகமுண்டாய் ஓடி
வருங்கா ரணர்க்குண்மை
வை. (16)

ஆசிரியர்:-

வித்துவான்,
சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர்:-

வித்துவான்,
சோ. சிங்காரவேலன், M. A.,

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 | 10–4–64 | இதழ் 5

உட்பொருள்

எண்		பக்கம்
1	புத்தாண்டு ஆசிச் செய்தி	... 263
2	ஆன்மீக வாழ்வு வளம்பெற	... 265
3	வணக்கம்	... 270
4	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	... 271
5	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்துக்கு வரவேற்பு	... 278
6	சிவாலய தரிசனமுறை	... 279
7	சிவவழிபாடும் சங்கநூல்களும்	... 282
8	தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள்	... 286
9	தருமம் என்று ஒரு பொருள்	... 290
10	சஹஸ்ராகமம்	... 293
11	சித்தாந்த வினாவிடை	... 297
12	அவன் இவன்தான்!	... 301
13	செய்திகள்	... 305
14	எதிர்காலம்	... 316
15	கடிதம்	... 314
26	மதிப்புரை	... ,,

அட்டைப்பட விளக்கம்

திருமுலைப்பால் திருவிழாவில் சிவிகையில் எழுந்தருளும் திருஞானசம்பந்தரை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தரிசித்தல்.

இவ்வாண்டு திருமுலைப்பால் திருவிழா 17—4—64ல் நிகழும்.

உ

குருபாதம்

தருமை யாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கி யருளிய

புத்தாண்டு ஆசிச் செய்தி

" ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே "

எல்லா மக்களும் இன்பத்தை விரும்புகின்றனர். பொதுமக்கள் தம் இன்பத்தையே நினைப்பர்; பெருமக்கள் பிறர் இன்பமடையவே பெரிதும் முயல்வர். 'எல்லாம் அரன் நாமமே சூழ்க; வையகமும் துயர் தீர்கவே' என்று திருஞானசம்பந்தப் பெருமானும், 'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே - அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே' என்று தாயுமானவரும் அருளினார்கள்.

எல்லார்க்கும் இன்பம் எய்தினால், தம் இன்பம் தானே அமைந்துவிடும். பலர் இன்பமின்றி வாழ, ஒருவன் இன்பத்துடன் வாழ்தல் இயலாது. எனினும், எல்லாரும் இன்புற்றிருக்க எண்ணும் உள்ளம் இறை உணர்வினாலே தான் உண்டாகும். இறை உணர்ச்சி உண்டானால், உடல் இன்பத்தைவிட உயிர் இன்பம் - ஆன்ம லாபம் - பெரிதாய்த் தோன்றும். அதனால், உடல் இன்பம் பற்றி வரும் அழுக்காறு அவா முதலியன நீங்கும்.

'ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்; எவ் வுயிர்க்கும் அன்பில்லார்' என்றும், 'எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவன் என்று - எவ்வுயிர்க்கும் அன்பாய்

இரு' என்றும் கூறும் சைவ சமய உண்மைகளின் படி, குரோதி ஆண்டின் தொடக்கமாகிய இப்புத்தாண்டு நன்னாளில் ஆலவாய்ச் சொக்கன் அருட்பெருக்கினால், 'எல்லா உயிர்களும் இறைவனுக்கு மக்கள் - உறைவிடம் என்னும் உயரிய எண்ணம் எல்லா உள்ளங்களிலும் உண்டாவதாக; அதன் பயனாக உலகெங்கும் பகையும் போரும் நீங்கி, அன்பும் அமைதியும் நிலவுக; திருவும் செல்வமும் சீரும் தழைத்து, கருணை பூத்து, காய்க்கும் உள்ளங்கள் பருவமாய்ப் பழுத்து, இருமை நலங்களும் எய்தி யாவரும் இன்புறுக.

எல்லாம் சிவன் செயல்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakatesvaraswamy Devasthanam, Tirucadaiyur

27-3-64. மகிமை பொருந்திய இத் திருக்கடவூருக்கு இன்றிரவு சுமார் 9-மணிக்கு நான்கு அன்பர்களுடன் யான் வந்தேன். முன்னறிவிப்புத் தர இயலவில்லை. இத் திருக்கோயிலின் பகுதிகள் யாவும் துப்புரவாக வைக்கப்பட்டிருந்தன. எல்லாச் சந்நிதிகளும் தெய்வீக பொலிவுடன் விளங்குவதை யாங்கள் கண்டு வழிபட்டுப் பேரானந்தம் அடைந்தோம். ஆலயத்து அர்ச்சகர்களும், தேவஸ்தான அலுவலகத்தவர்களும் மிக்க அன்புடன் எங்கட்குத் தரிசனம் செய்துவைத்தார்கள். தலபுராணத்தின் மாண்புசால் செய்திகளையும் தெரிவித்தார்கள். இன்று இரவு யாங்கள் தங்குதற்குச் சிறந்த வசதியும் அன்புடன் அளித்தார்கள். திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் பார்வையிலிருக்கும் திருக்கோயில்கள் யாவும் சிறந்த முறையில் பரிபாலிக்கப்படுகின்றன என்னும் புகழ் தமிழகம் நன்கறிந்து போற்றிவருவதாகும். இந் நன்னாளில் இத்தலத்தில் வழிபாடு செய்து ஆன்மநலம் பெருக்கிக்கொள்ளத் திருவருள் துணை செய்ததற்கு எங்கள் பெருநன்றியும் வணக்கமும் உரியன.

(Sd.) ச. சச்சிதானந்தம் பிள்ளை.
(Dt. Educational Officer, Retd.)

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] சோபகிருது - பங்குனி - 10—4—64 [இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

ஆன்மீகவாழ்வு வளம்பெற:

உள்ளம் அமைதி பெற்றால் இன்பம்: அந்த அமைதியை அவ்வளவு சீக்கிரம் அடைந்துவிட முடியுமா? முடிகிறதா? இல்லை. அதற்கு எவ்வளவோ முயற்சி தேவையாயிருக்கிறது· அந்த முயற்சி ஐம்புலன்களை அடக்கும் அரிய முயற்சி· புலன்களால் வேறுபட்டுத் தோன்றும் காட்சிகளை ஒருமுகப் படுத்தி இறைவனைக் கண்டால், அந்தக் காட்சி யனுபவத்தால் அமைதி பிறக்கும்; அந்த அமைதியில் தோன்றும் இன்பமே திருவருட்காட்சி; இன்பத் திருக்காட்சி; பேராவியற்கைப் பேரின்பக் காட்சி, 'ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள' அளத்தற்கு அரிய கரணங்கள் நான்கும் சிந்தையே ஆக

மூன்று குணங்களும் சாத்துவிகத்திலே நிற்க. இவ்வாறு அருளாளர்கள் கண்ட அருட்காட்சியை நாமும் காணலாம்; நாமும் அவர்கள் அருள்நெறியைப் பின்பற்றும் உறுதி ஒன்றே வேண்டும்.

அந்த உறுதியை நாம் மேற்கொள்ளும் பூசனைகளும், நோன்புகளும், வழிபாடுகளும் தரும்; யாத்திரைகளை அமைத்து. மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினுல் அருட்சித்தி பெறலாம்; ஆன்மீக வாழ்வு வளம்பெறும் என்று ஆன்ருேர் விதித்திருப்பது இதுபற்றியே. மாதந்தோறும் சிறப்புத் திருநாட்களைப் பெருமான் கொண்டு அவ்வத் திருநாட்களில் அன்பர்களுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு வேண்டியன வேண்டியாங்கு வழங்குகின்ருன். பங்குனித் திங்களில் ஆண்டு முடிவடைகின்றது. ஒவ்வோராண்டும் பங்குனியில் முடியும்போது உத்திரத்திருநாளில் உலகெலாம் படைத்த முழுமுதற் கடவுள் உயர்சிறப்புக் கொள்கின்ருன்.

பங்குனி உத்திரம் என்று எண்ணும்போதே, சைவப் பேரன்பர்கள் நெஞ்சங்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், ஆகிய சமய குரவர்கள் அருள் வாழ்வும், அவற்றுள் பங்குனி உத்திரம் பற்றிய நிகழ்ச்சித் தொடர்புகளும் எழுவது இயல்பு.

திருஞானசம்பந்தர் திருமயிலையில், பூம்பாவையை எழுப்பிய திருப்பதிகத்துள், பங்குனி உத்திரத் திருவிழாவை ஏழாவது திருப்பாடலில் எடுத்துக் கூறியருளுகின்ருர்கள்; உருத்திர பலிச்சிறப்பையும், அன்பர்கள் பாடல்களாற் பாடி வழிபடுமாற்றையும் 'பலிவிழாப் பாடல்செய்' என்ற அடைமொழியால் அருள்விளக்கம் செய்கின்ருர்கள். பலரும்கூடி ஆரவாரித்துத் திருவருளில் தோயும் திறத்தை 'ஒலி விழா' என்கின்றது திருவாக்கு; இவ்வழகிய திருப்பாடல் பின்வருமாறு:

"மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திர நாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய்"

திருநாவுக்கரசர், 'சோற்றுத்துறைக்கு அப்பர்' என்ற சிறப்புடைய அருளாளர். அவ்வருளாளர் திருவாதிரைத் திருவிழாவைப் பற்றி ஒருபதிகமே (4-21) பாடியருளியுள்ளார்கள் அன்றியும் அட்டமி என்ற திருவிழாவை (4-50-2) யும் மகா மகத்தையும் (5-22,-6-75.) அருளியுள்ளார்கள். அப் பெருமானார் திருவாக்கில், பங்குனி உத்திரம் இடம்பெற் றுள்ளது. அவ்வருந் திருப்பாடற் பகுதிகள் பின்வருவன:

"பாரூர் பரிப்பத்தம் பங்குனி உத்திரம் பாற்படுத்தான்"
(4-102-2)

"ஒத்தமைந்த உத்திர நாள் தீர்த்தமாக
ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின்றுரே" (6-45-3)

திருவேமப் பேறூரைச் சேர்ந்த நமிநந்தி அடிகள் நாயனார் பங்குனி உத்திரத் திருநாளை நீள் நாடெலாம் அறியச் செய்தவர்; நீரால் விளக்கிட்ட நேரியர்; அவரை அப்பர் அடிகள் 'ஆணி' போல்வார் என்ற கருத்துப்பட, "தோண்டர்க்கு ஆணி" என்று சிறப்பித்துள்ளமை இத்திருப் பாடலால் அறியலாம்:

"ஆராய்ந்து அடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரூர்
அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி உத்திரம் பாற்படுத்தா
ஞரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணுடு அறியுமன்றே"

இவ்வாறு அப்பரடிகள் எடுத்து ஏத்தியதைச் சேக்கிழார் வியந்து பாராட்டும் பெரிய புராணத் திருப்பாடலும் இங்கு கண்டு இன்புறத்தக்கது :

"நீறு புனைவார் அடியார்க்கும் நெடுநாள் நியதியாகவே
வேறு வேறு வேண்டுவன எல்லாம் செய்து மேவுதலால்
ஏறு சிறப்பில் மணிப்புற்றில் இருந்தார் தொண்டர்க்கு ஆணி எனும்
பேறு திருநா வுக்கரசர் விளம்பப் பெற்ற பெருமையினர்"
(நமிநந்தியடிகள் - 31)

இனி, சுந்தரர் பெருமான் பரவையார் பங்குனி உத்திரத் திருநாளில் தானதருமங்கள் குறைவறப் புரிவதற்குப் பொன் வேண்டுமே என்று கருதிப் புகலூர் புகுந்து, அங்குச் செங் கற்களே செம்பொற் கட்டிகளாகத் திருவருளாற் பெற்றுப் பேரின்புற்றுப் பரவையாரை மகிழ்வித்தமையும் அந்நாயனர் வரலாற்றில் காண்பதாகும். இதனல் பங்குனி உத்திரத் திருநாளில் அடியார்கட்கு வேண்டுவன கொடுத்து வழிபடும் சிறப்பு அறியப்படும்.

"செறிபுன் சடையார் திருவாரூர்த் திருப்பங்குனி யுத்திரத்திருநாள்
குறுகவரலும் பரவையார் கொடைக்கு விழாவிற் குறைவறுக்க
நிறையும்பொன்கொண்டணைவதற்கு நினைந்துநம்பிதிருப்புகலூர்
இறைவர்பாதம் பணியவெழுந் தருளிச் சென்றங் கெய்தினர்"

இவ்வாறு சமயகுரவர்கள்வாழ்வுடன் ஒன்றுபட்ட பங்குனி உத்திரத் திருநாள் ஆண்டின் நிறைவில் மலர்த்திய பெரு மகிழ்வுடன் புத்தாண்டு தலைப்படும். சைவப்பேரன்பர்களுக்கு ஆண்டுத் தோடக்கத்திலேயே வந்து அருள் ஞானம் பெருக் குவது ஞானப்பால் திருநாள் (சீர்காழி திருமுலைப்பால் உற் சவம்) ஆகும். சிவன் அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர் வரிய மெய்ஞ்ஞானமும்ஆகிய எல்லா ஞானங்களையும் உணர்ந்த திருஞானசம்பந்தராம் பேரருட் பெருந்தகையாரின் திருவடி களைப் பற்றி வழிபட்டு அருள்பெற இத்திருநாள் சித்திரையில் வருகிறது; அன்பர் சிந்தையெல்லாம் ஞானம் பொழியும் சிவ ஞானத் தேக்கமாகச் செய்யும் திருவிழா இது.

திருநிலை நாயகியார் 'எண்ணிய சிவஞானத்து இன்ன முதம் குழைத்து அருளி, 'உண் அடிசில் என ஊட்டினார்' எனச் சேக்கிழார் இவ்வற்புதம் குறித்து எழில் ஒழுகப் பாடு கின்றார்; திருஞானசம்பந்தர் ஞானம் பெற்ற இத்திருநாளில் இந்த ஐதிகத்தை ஆண்டுதோறும் நினைவுகூரந்து, அத்திரு நாளில் நாமும் ஞானநெறியின் படிநிலைகளில் ஒவ்வொன்றாக, தரத்திற்கேற்றபடி பெற்றுப் பற்றிப் பயன்பெறுதல் கடனா கும்; 'திருமுலைப்பால் கண்டவர்க்கு மறுமுலைப்பால் இல்லை' என்பது நம்நாட்டுப் பழைய வழக்கு. மறு பிறவி இலாது, இறைவன் திருவடி இன்பம் திளைத்தல் வேண்டும் என விரும் பாத மனிதர் இல்லை; அதனை இத்திருவிழாக் காட்சி விளக் கும் என்றால், தமிழ்நாட்டின் தேசிய அருள்விழா இது என்று கூறற்கு ஐயமும் உண்டோ?

தமிழகமே திரண்டு சித்திரைத் திங்கள் திருமுலைப்பால் திருநாளில் சிவத்தலமாம் சீர்காழிக்கு வந்து இந்தத் திரு வருட் காட்சியும் பெருநலமும் பெற்று உய்தல் வேண்டும். ஆண்டின் தொடக்கத்தில் சித்திரைத் திங்களிலே பெறுகின்ற இந்த ஞானப்பேறு, ஆண்டு முழுமைக்கும் வாழ்வை இன் பூட்டிவரும் இனிய விளைவாக இருக்கும்.

தமிழ்நாட்டின் அன்புலகுக்குக் கிடைத்துள்ள பெரும் பேறுகள் பல; அவற்றுள்ளும் இத்தகு விழாக்கள் முதலிடம் பெறுவன. இவ்விழாக்கள் கல்லாக்கும் கற்றவர்க்கும், இளையார்க்கும் முதியவர்க்கும், மடவார்க்கும் ஆடவர்க்கும் - எல்லார்க்கும் அறிவு விழிப்புத் தரும் ஆன்மீக வாழ்வை வளம்படுத்துபவை. தருமை யாதீனத்தைச் சார்ந்துள்ள, திருஞானசம்பந்தர் திருவவதாரத் திருத்தலமாகிய சீர்காழி, கனகாபிடேகம் கொண்ட கயிலைக் குருமணி யவர்களுடைய அருளாட்சியில் அருள்வளம் பெருக்கி நிற்கிறது. அன்புலகம் வருக - காண்க - இன்புறுக என்பதே அருளாளர்களின் பெரு விருப்பம்; கயிலைக் குருமணியவர்களுடைய திருவுள்ளம்.

வணக்கம்

குரோதி ஆண்டாகிய புத்தாண்டுத் தொடக்கத்தை முன் வைத்து வரும் இத்திங்களின் ஞானசம்பந்தம் இதழில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள், 'இருபா இருபஃது' என்னும் சிந்தனைச் சாத்திரத்தின் சிறப்பைத் தங்கள் அருளுரையாக வழங்கியுள்ளார்கள். அன்றியும் எல்லாரும் இன்புற்றுவாழ வழித்துணையாகும்படி புத்தாண்டு ஆசிச்செய்தியையும் உலகிற்கு அளிக்கின்றார்கள்.

முன்னைய இதழ்களில் உள்ள சித்தாந்த வினாவிடை, சிவாலய தரிசனமுறை, சிவவழிபாடும் சங்க நூல்களும், சகஸ்ராகமம், தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரை முதலிய தொடர்கட்டுரைகள் இவ்விதழிலும் தொடர்ந்து வருகின்றன. புதியதாக, 'தருமம் என்று ஒரு பொருள்' என்ற கட்டுரையும் இவ்விதழில் இடம்பெறுகின்றது.

செய்திகள், எதிர்காலம் முதலியனவும் வழக்கம்போலவே இவ்விதழிலும் வந்து வாசகர்களுக்குப் பயன் தரும். புத்தாண்டில் ஞானசம்பந்தத்தை அன்பர்கள் நிரம்பப்பெற்று நலன் அடைவார்களாக.

உ
குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

வெண்பா

தருமா தருமத் தலைநின்ருழ் வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப் - பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தான்
உருவென்ன வந்தெடுத்தான் உற்று.

—அருணந்தி சிவாசாரியார்.

உயிர்கள் இறைவனது இன்பத்தை அடையவொட்டாது தடுத்து நிற்பது, அறியாமையே வடிவாகிய ஆணவ மலம். இதற்கு மாற்று மருந்தாய் இறைவனால் சேர்க்கப்பட்டவை கன்மமும், மாயையும். அவற்றுள், கன்மம் உயிர்கள் இயங்கும் ஒழுங்குமுறையாயும், மாயை அவ்வொழுங்கு முறையினால் வரும் பயனுயும் அமையும்.

இவற்ருல் ஆணவமலம் தனது சத்தி மடங்கிப்போக, உயிர் அதனது கட்டினின்றும் விடுபடும் நிலையில் கன்மத்தின் ஒழுங்கு முறை பயன்படாது ஒழியும். கன்மத்தின் ஒழுங்கு முறையினால் விளைவன பிறப்பிறப்புக்கள். அவ்வொழுங்குமுறை பயனற்றுப் போனால், உயிர் பிறப்பிறப்புக்கள் இன்றி, இறைவன் திருவடியையடைந்து, அவனது இடையருத இன்பத்தை என்றும் அனுபவித்துக்கொண்டு இருக்கும்.

அறியாமையே வடிவாய் உள்ள ஆணவமலம், உயிர்களது அறிவு, இச்சை, செயல்களைச் சிறிதும் தொழிற் படாதவாறு அடியோடு மறைத்திருக்கும். அப்பொழுது உயிர் யாதோர் அறிவும் செயலும் இன்றிச் சடம்போற் கிடக்கும். இதனை, '**கேவல நிலை**' என்பர். இந்நிலைக்கு இரங்கி இறைவன்

கன்மத்தையும், மாயையும் கூட்டிய பொழுது உயிருக்கு அவனை அறியும் பேரறிவு முதலியன உண்டாகாமல், உலகத்தையே அறியும் சிற்றறிவும், உலகத்தையே இச்சிக்கும் சிறிய இச்சையும் உலக இன்பத்தையே பெற முயலும் சிறிய செயலும் தோன்றும். அவற்றின் பயனாகவே பிறப்பும் இறப்பும் மாறிமாறி இடைவிடாது வந்துகொண்டிருக்கும். இதனை, '**சகல நிலை**' என்பர். மும்மலமும் நீங்கி உயிர் இறைவனை அடைவது '**சுத்தநிலை**' எனப்படும்.

ஆணவ மலத்தின் கட்டு அறும்பொழுதுதான், பிறவிக்கு வழியாக அமையும் கன்மத்தினது ஒழுங்குமுறை பயன்படாது நீங்கும். ஆகவே, உண்மையில் பிறவிக்குக் காரணம் ஆணவ மலமும், கன்ம மலம் அதனைத் தெரிவிக்கும் அறிகுறியுமே யாகும். ஆயினும், பிறவி, கன்மத்தின் ஒழுங்குமுறைப்படியே வருதலால், கன்மமே பிறவிக்குக் காரணமாகச் சொல்லப்படும். கன்மம், ஆணவத்தைப் பற்றியேநிற்கும் என்பதனைத் திருவள்ளுவ நாயனாரும், "**இருள்சேர் இருவினை**" என்று குறித்தார்.

ஆணவக்கட்டு நெகிழ, கன்மம் செயலறும் நிலையில்தான் உயிர்கட்கு இறைவனை அறிய இச்சை உண்டாகும். அப்பொழுது இறைவனே தன்னை அறியும் பேரறிவை உயிர்கட்கு அளிப்பான். அந்தப் பேரறிவே, '**ஞானம்**' என்று சிறப்பித்துச் சொல்லப்படும்.

'ஒருமலம் உடையவை, இருமலம் உடையவை, மும்மலம் உடையவை' என உயிர்கள் மூன்று வகையாய் இருத்தலால், இறைவன் அவைகட்கு ஞானத்தைக் கொடுக்கும் முறையும் மூன்று வகையாகும். ஆணவமலம் ஒன்றே உடைய உயிர்கட்கு (விஞ்ஞானகலருக்கு) அறிவுக்கறிவாய் உள் இருந்தே இறைவன் ஞானத்தைக் கொடுப்பான்; 'ஆணவம், கன்மம்' என்னும் இரண்டு மலங்களை உடைய உயிர்கட்கு (பிரளயாகலருக்கு) அவன் ஒருகால் நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறும்உடைய தெய்வ வடிவத்தில் தோன்றி ஞானத்தைக் கொடுப்பான்; 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மூன்று மலங்களையும் உடைய உயிர்கட்கு (சகலர்களுக்கு) மானிட உருவத்தில் ஆசாரிய மூர்த்தியாய் வந்து ஞானத்தைக் கொடுப்பான். இந்த மூன்று வகையையே, பரஞ்சோதி முனிவர்,

" வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணர் உள்ளர் தோறும்
சென்றுளே அமுதம் ஊற்றும் திருவருள் போற்றி ஏற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறியாடும் மறைச்சிலம் படிகள் போற்றி "

என்று, மூன்று போற்றிகளால் துதித்தார். மன்றுளே ஆடுவது நிலவுலகத்தில் என்றும் நீங்காது நின்று ஆடும் சகளத் திருமேனியாகையால், அஃது ஆசாரிய மூர்த்தத்துக்குப் பொருந்துவதாயிற்று. குமரகுருபரரும் தமது கந்தர் கலிவெண்பாவில்,

" கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன் என்று ஓர்திருப்பேர் கொண்டு - திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி உடல்அறுபத் தெட்டு நிலம்
ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும் - பாழாக
ஆணவ மான படலங் கழித்துஅறிவிற்
காணரிய மெஞ்ஞானக் கண்காட்டிப் - பூணும்
அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி - முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப் - போக்கும்
வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா இன்பம் - மருவுவித்து "

என்றும்,

" கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானும்உடன் மால்விடைமேல் - மின்இடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த
கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து "

என்றும்,

" உள்நின்று - ஒருமலத்தார்க்கு இன்பம் உதவி "

என்றும் இம்மூன்று வகையினையும், 'சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்' என்னும் முறையில் விளக்குதலைக் காணலாம்.

அருணந்தி சிவாசாரியார், தமக்கு இறைவன் ஆசாரியனாய் வந்து ஞானத்தை அருளிய முறையையே மேற்காட்டிய

வெண்பாவில் விளக்கியுள்ளார். ஆணவமலம் பரிபாகம் அடையாதபொழுது கன்மத் தொடர்பு நீங்காது. 'புண்ணியம், பாவம்' என்று கன்மம் இருவகையாய் இருக்கும். அதனையே, "தருமா தருமத் தலைநின்று ஆழ்வேனை" என்று அருளினர்,

பக்குவான்மாக்களுக்கு இறைவன் ஆசான் மூர்த்தியாய் வந்து அருளும் முறையில் அருணந்தி சிவாசாரியாருக்கு, விடம் உண்ட கண்டனாகிய இறைவன், திருவெண்ணெய் நல்லூரில் இருக்கும் மெய்கண்ட தேவ நாயனாராக வந்து, சஞ்சித கன்மத்தைத் தொலைத்து, ஞானத்தை யருளி, பிராரத்தத்தை உடலூழாக்கி, ஆகாமியம் ஏறவொட்டாது தடுத்து, பிறவிக் கடலினின்றும் எடுத்துத் தனது திருவடியாகிய கரையிற் சேர்த்தருளினமையை, இச் செய்யுளில் எடுத்துச்சொல்லி மகிழ்கின்றார். இத்தகைய பேறு நாம் அனைவரும் பெறத்தக்கது; பெற வேண்டும்.

ஆசாரியரது அருளைப்பெற்றபின்பு அருணந்தி சிவாசாரியார், அவரது ஆணையின் வண்ணம் அவரது முதல் நூலாகிய சிவஞான போதத்தின் பொருளை விரித்து, 'சிவஞான சித்தியார்' என்னும் வழிநூல் செய்தார். அது புறச்சமய உணர்ச்சிபற்றித்தோன்றக் கூடிய பல ஐயங்களையும் நீக்கி, உண்மையைத் தெளிவிக்கும்:

அதனைச் செய்தபின்பு அவர் தம் ஆசாரியரைத் தாம் வினவும் முறையில், '**இருபா இருபஃது**' என்னும் நூலைச் செய்தருளினர். இதில் சித்தாந்த நுணுக்கம் பற்றிய பல வினைக்களைக் காணலாம். இவ்வினைக்கள் சித்தாந்தப் பொருளைக் கேட்டறிந்த மாணக்கர்கள் அதனைப் பின்பு நன்கு சிந்திக்கத் தூண்டுவதாகும். நூலில் வினக்கள் உள்ளனவேயன்றி விடைகள் இல்லை. விடைசொல்லப்பட்டு இருப்பின், படிப்போரதுசிந்தனைக்கு வேலை இல்லாமற் போகும். ஆகையால் விடைகள் சிந்தித்துக் காணும்படி விடப்பட்டிருக்கின்றன. சிவஞான சித்தியாரைக் கேட்டுணர்ந்தவர்கள் அதன் வழியில் நின்று சிந்திப்பின் அவைகட்கு நல்ல விடைகள் கிடைக்கும். அவ்வினைக்கள், சித்தாந்தத்தை அறிந்த அறிஞரது அறிவிற்கு விருந்தாயும், அருமையுடையனவாயும் உள்ளன. ஒரு பாட்டில் உள்ள சில வினைக்களைக் காண்போம்:

"இறைவன் எல்லாப் பொருளிலும் என்றும் நீங்காது நிறைந்திருப்பின், உயிர்களுக்கு அஞ்ஞானம் எவ்வாறு உண்டாயிற்று? 'ஆணவமல மறைப்பினுல் உண்டாயிற்று' எனின், ஆணவம் வந்து பற்றும்படி 'இறைவன் சிறிது நேரம் உயிரை விட்டு நீங்கி இருந்தான்' என்று சொல்லவேண்டும். 'எப்பொழுதும் நீங்காமலே இருக்கின்முன்' என்ருல், இருளுக்கு ஒளிபோல, அவன் ஆணவத்துக்கு மறுதலைப்பொருள் என்றல் முடியாது; ஆனுல், அவனைப் பெரியோர், 'சுத்தன், மலத்தை நீக்குபவன் ஞானமே வடிவானவன், எல்லாப் பொருளையும் தன் ஆணைவழி நடத்தும் தலைவன், இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கியவன், மிக மேலானவன்' என்றெல்லாம் சொல்கின்றனர்.

'தாய் அருகில் இருப்பினும் பிள்ளைக்கு, பசி, நோய் முதலியன வருதல்போல, இறைவன் நீங்காது இருக்கவும் உயிர்கட்கு அஞ்ஞானம் உண்டாயிற்று' எனின், நின்ற திருத்தாண்டகம் முதலிய அருள்மொழிகள், தாய் பிள்ளைக்கு வேருய் இருப்பதுபோல, இறைவன் உயிர்களுக்கு வேருய் இருப்பதாகச் சொல்லவில்லை. உயிர் உடலில் ஒன்ருய்க் கலந்திருப்பதுபோல அவன், உயிர்களில் ஒன்ருய் இருப்பதாகவே சொல்கின்றன.

'இறைவன் ஞானமே வடிவாய் இருப்பினும், ஞானத்தைத் த்ரவேண்டிய பக்குவ காலத்தில்தான் குருவாய்வந்து தருவன்; அதனுல் பக்குவம் இல்லாத காலத்தில் அதற்கு அஞ்ஞானம் உண்டாயிற்று' எனின், பக்குவாபக்குவங்களைப் பார்ப்பதாயின் குருவுக்கு என்ன பெருமை உண்டு? ஏனெனில், பக்குவம் வாராதபோது ஞானத்தை விளக்கினுலும் விளங்கப்போவதில்லை; பக்குவம் வந்தபின்பு, ஞானம் தானே விளங்கிவிடுகின்றது. 'அப்படியன்று, பக்குவத்தின் பயன் குரு வருவதுதான்' என்ருல், ஒப்பற்ற அருளுடையவனுகிய இறைவனை, 'பக்குவம்' என்பது கொண்டுவந்து சேர்க்கும் என்பது பொருந்துவதாய் இல்லை.

மேலும் பக்குவம் என்பது மலத்திற்கா? உயிருக்கா? இறைவனுக்கா? மலம் சடமாகலின் அதற்கு ஞானத்தைப் பெறும் பக்குவம் உண்டாகாது. இளமை, முதுமை முதலிய மாற்றங்கள் உடலுக்கு அன்றி, உயிருக்கு இல்லாமையால் உயிர் எப்பொழுதும் ஒருதன்மையாவதன்றி, அதற்குப் பக்குவம் என்பது

ஏது? இனி, இறைவன் என்ஞான்றும் தூயவனே ஆகையால், அவனுக்குப் பக்குவம் என்பது பொருந்தாமை வெளிப்படை. ஆகவே, பக்குவம் எந்தப் பொருளுக்கு?

உயிரைவிட்டு மலம் நீங்குவதுதான் 'பக்குவம்' எனப்படுகின்றது' என்றால், இறைவன் தான், நினைத்தபொழுது உயிர்கட்கு மலத்தை நீக்கி அருள்செய்ய மாட்டானாயின், அவனை, 'எல்லாம் வல்லவன்' என்பது எப்படிப் பொருந்தும்? இறைவனையன்றி, மலம் தானே ஒருகாலத்து நீங்குவதாயினும், அல்லது உயிரே அதை ஒரு காலத்தில் நீக்கிக்கொள்வதாயினும், இறைவன் எதற்கு?

'இவ்வாறெல்லாம் வினவுவதற்கு, **"காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே"** என்னும் அப்பர் அருள்மொழியின் பொருளையும், **"ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும் - கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா"** என்ற ஞானசம்பந்தர் அருள்மொழியின் பொருளையும் உணரமாட்டாத குறைதான்; அவற்றை நன்கு உணர்ந்துகொள்க என்பதுதான், இவ்வினாக்களுக்கெல்லாம் விடையோ?' இங்ஙனம் ஒரு செய்யுளில் வினாக்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

இவ்வினாக்களைக் கேட்கும்பொழுது இவற்றிற்கு விடை கூறுவது இயலாது என்பதுபோலவும், சாத்திரங்களிற் சொல்லி இருப்பனவெல்லாம் பொருந்ாதனபோலவும் தோன்றும். ஆனால், இவை அனைத்திற்கும் பொருத்தமான விடைகள் - விளக்கங்கள் - உள்ளன. சாத்திரங்களில் சொல்லப்பட்டவை அனைத்தும் உண்மையே. அவைகளைச் சித்தியார் முதலிய சாத்திரங்களின் வழிநின்று சிந்தித்து உணர்தல் வேண்டும்.

ஆயினும், சஞ்சித கன்மம் நீங்காமையால், உண்மை விளங்காமல், மேற்சொல்லியபடியெல்லாம் ஐயங்கள் உண்டாகின்றன. இதைத் தெரிவிக்கவே, "தருமா தருமத் தலைநின்று ஆழ்வேனை" என்று அருளினார், அருணந்திசிவாசாரியார். 'தருமம், அதருமம் - புண்ணியம், பாவம்' என்னும் இருவினைகளும் ஒத்து நிற்கும் இருவினையொப்பும், அதன்பின் உண்டாகும் அருட்சத்தி பதிவாகிய சத்திநிபாதமும் மலபரிபாகங் காரணமாக வந்தபொழுது, இறைவன் குருவாய் வந்து ஞானத்தை

உணர்த்தும் நிலையில், இப்படிப்பட்ட ஐயங்கள் எல்லாம் சூரியன் முன் இருள்போல நொடியில் நீங்கி, உண்மை விளங்கும் என்பதனையே, "கருமா கடல்விடம்உண் கண்டப் பெருமான்...... வந்து எடுத்தான்" என்று கூறினர்.

குருவின்றிச் சாத்திரங்களால் மட்டும் உண்மையை உணர்ந்து கொள்ளுதல் இயலாது; ஐயங்கள்தாம் மிகுதியாகும். ஆயினும் நூலறிவினால் மலம் பரிபாகம் அடைந்து, சத்தநிபாதம் உண்டாகும். ஆதலின், மெய்ந்நூல்களைக் கருத்துடன் கற்றலும் கேட்டலும் வேண்டும். குருவருளால் ஞானோபதேசம் கிடைத்தபின்னர், அவ்வுபதேசப் பொருளைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுதற்கும் மெய்ந்நூல்கள் வேண்டப்படுகின்றன. சகலர்களுக்கு இறைவன் குருவாகி வந்து அருள் செய்தல், ஞானத்தை உபதேசமொழியால் கேட்பித்தும், பின்னர் அதனை நூல்களின்வழி உடன் நின்று சிந்திப்பித்தும், தெளிவித்தும் நிட்டைகூடச் செய்து அதிலே நீங்காது நிற்பித்தற் பொருட்டேயாம். அந்நிலையில் மாணாக்கர்க்கு உண்டாகக்கூடிய ஐயப்பாடுகளை எல்லாம் பலவாறாக எடுத்துக் காட்டிச் சிந்திப்பிக்கின்ற ஒரு சிந்தனை நூலை எத்துணை அருமையாக அருணந்தி சிவாசாரியார் நமக்கு அளித்துச்சென்றிருக்கின்றார் என்பதை உணர்ந்து போற்றுதல் நமது கடமையாகும்.

இவ் இருபா இருபஃது வெறும் சிந்தனை நூலாக மட்டும் இல்லாமல், தமக்கு உண்மை ஞானத்தை அருளிப் பிறவிக் கடலினின்றும் தம்மைக் கரையேற்றிய ஞானாசாரியரது பெருமைகளை யெல்லாம் எடுத்தோதிப் போற்றுகின்ற ஒரு தோத்திர நூலாகவும் அமைந்திருத்தலைக் காணலாம். இத்தகைய அரிய நூலை அனைவரும் நல்லாசிரியரை அடுத்துக் கேட்டும், சிந்தித்தும் உண்மையை உணர்ந்து உய்வார்களாக.

வரவேற்புரை

* சித்தாய்மூர், சொர்ணபாதேசுவரர் திருக்கோயில் இறைபணியாளரும் அறங்காவலரும்

திருநெறிய தமிழ் வளர்க்கும் வள்ளல் பெருமானே !

மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க நாளும் இன்னிசையால் தமிழ்பாடிய ஞானசம்பந்தப்பெருமான் மன முருகி வழிபட்ட மாண்புமிகும் இத்தலத்திற்கு வருகை தந்தருளிய எங்கள் தவமணியாம் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் பாதமலர் பணிந்து, வருக, 'வருக' என வரவேற்று மகிழ்கிறோம். புனிதத் தமிழ்நாட்டு மாந்தரும் நாத்திகம்பேசி நாத்தழும்பேறத் தொடங்கிவிட்ட இருண்ட காலத்தில் தருமை யில் ஞானக்கதிரொளி பரப்பும் ஞாயிறெனச் சந்நிதானம் அவர்களின் அருளாட்சி மலர்ந்தது. அத்தகு மலர்ச்சியால் எழுந்த தெய்வ நறுமணம், மந்த நிலையில் மன்னித் துயின்றிருந்த சமய உலகில் ஒரு புது ஒளியும், ஒரு பெரும் பொலிவும் தோற்று வித்தது. இதுகண்டு சைவமும், தமிழும் இணைந்த நல்லுலகம், 'இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் அவர்களின் சீரிய செங்கோன்மை வாழ்க, வாழ்க' என வாழ்த்தி மகிழ்கிறது. அம் மகிழ்ச்சியில் திளைத்திடும் யாங்களும் பாரவர் போற்றிடும் இப் புண்ணிய நல்லரசுக்குப் பக்தியுடன் பல்லாண்டிசைத்துப் போற்றுகிறோம்.

---

* திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 6—4—64ல் திருச்சிற்றேமத்திற்கு எழுந்தருளியபோது வாசித்தளித்தது.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவில்:

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ சனிபகவானைத் தரிசனம் செய்தல்

திருக்கடவூர்: காலசம்காரமூர்த்தி



வையாறு: கண்ணாடிப்பல்லக்கு

சிவாலய தரிசனமுறை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்,

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 23, இதழ் 4, பக்கம் 213 இன் தொடர்ச்சி)

துவார வழிபாடு

உள்ளே சென்றவுடன் கோயில் அடைந்து துவாரபாலகரை வணங்கிக்கொண்டு, பின்பு துவார நாயகரான நந்திதேவரை வணங்கி உள்ளே செல்ல அனுமதி பெற்று, வாயிலைக் கடத்தல் வேண்டும்.

'நந்தி தேவர்' என்றவுடன் சிலர், இடப தேவரையே நினைத்துக்கொள்ளுகிறார்கள். இடபதேவர் என்பவர் காளை உருவத்திலிருப்பவர். அவரை எல்லாக் கோயில்களிலும் காண முடிகிறது. நந்திதேவர் கணங்கட்குத் தலைவர்; அவரை மிகச் சில கோயில்களில்தான் பார்க்கமுடியும். என்றாலும், பாவனையினாலாவது அவரை வணங்கி அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும்.

விநாயகர் தரிசனம்

வாயிலைக் கடந்து விநாயகர் சந்நிதியை அடைந்து இரு கைகளையும் முட்டியாகப் பிடித்துத் தலையின் இருபுறங்களிலும் மூன்று முறை குட்டிக்கொண்டு, வலக்கையினால் இடக்காதையும், இடக்கையினால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு தாழ்ந்து எழுதலாகிய தோப்புக்கரணத்தை மூன்றுமுறை இட்டு வணங்குதல்வேண்டும்.

தலையில் குட்டிக்கொள்ளுதலும், தோப்புக்கரணம் இடுதலும், விநாயகர் சந்நிதியில் மட்டுமே செய்யவேண்டும், மற்றைய சந்நிதிகளில் வேண்டா.

மூலத்தான தரிசனம்

விநாயகர் சந்நிதியிலிருந்து வலமாக மூலத்தானத்தை அடைந்து, முதலில் சிவலிங்கப் பெருமானை நிவேதனங்களுடன் தரிசித்து விபூதிவாங்கி யணிந்து, பின்பு அம்மையை அவ்வாறு தரிசித்துப் பிரசாதம் பெற்று மீளல் வேண்டும்.

திருச்சுற்றுத் தரிசனம் 1

அதன்பின் முறையே நடராஜர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர், திருமால், இலட்சுமி முதலிய மூர்த்திகளைத் தரிசித்தல் வேண்டும்.

திருச்சுற்றுத் தரிசனம் 2

அதன்பிறகு சமய குரவர், சந்தான குரவர், நாயன்மார் முதலிய பெரியோர்களைத் தரிசனம் செய்தல் வேண்டும்.

சண்டேசுரர் தரிசனம்

எல்லாத் தரிசனங்களும் முடிந்த பின்பு சண்டேசுரர் சந்நிதியையடைந்து கும்பிட்டுத்தோத்திரித்து மூன்றுமுறை அளவான ஓசையில் கை தட்டி, சிவாலய தரிசன பலனைத் தரும்படி வேண்டி வெளிவருதல் வேண்டும்.

வெளியே வந்து, இடபதேவரது இரு கொம்புகளின் நடுவே சிவலிங்கப்பெருமானைக் கண்டு கும்பிட்டுப் பின்பு முன்போலவே இடபதேவருக்குப் பக்கத்தில் நமஸ்காரம் செய்து எழுந்து அமர்ந்து ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை நூறு உருவும் அகோர மந்திரத்தை நூறு உருவும் ஜபித்து மீண்டும் நமஸ்கரித்து வீட்டிற்குச் செல்லுதல் வேண்டும்.

திருக்கோயிலில் செய்யத் தகாதன

தூய்மை இல்லாது செல்லுதல், அசுத்தப்படுத்தல், சட்டை, போர்வை, மேலாடை, பாதரக்ஷை அணிந்துகொண்டு செல்லுதல், உணவு உண்ணுதல், தாம்பூலந் தரித்துக் கொள்ளுதல், உறங்குதல், ஆசனத்தில் இருத்தல், அடக்கமின்றி இருத்தல், பிற பேச்சுக்கள் பேசுதல், சிரித்தல், ஓடுதல், சண்டை யிடுதல்,

நிர்மாலியத்தை மிதித்தல், தாண்டுதல், சுவாமிக்கும் இடபத்திற்கும் இடையே போதல், சுவாமிக்கும் சண்டேசுரருக்கும் இடையே போதல் முதலிய செயல்கள் திருக்கோயிலில் செய்யத் தகாதனவாகும்.

திருக்கோயிலில் தேவர்களும் நெருங்கியுள்ளனர் என்பதை உணர்ந்து அவர்கட்கும், வழிபாட்டிற்கு வரும் அன்பர்களுக்கும் வருத்தம் உண்டாகாதபடி சென்று தரிசித்து மீளல் வேண்டும்.

இம் முறையில் மக்கள் அனைவரும் சிவாலய தரிசனத்தைச் செய்து இகபர நலங்களை இனிது எய்துவாராக.

வாழ்க சிவநெறி.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Amirthakateswaraswami Devasthanam, Tirucadaiyur.

I with my friends visited the temple and had worship. The temple is kept in good condition and the premises are kept clean. The staff is courteous and they are very sincere servants. Hope the same condition will continue in future. The deities are decorated excellently

(Sd.) Ettayappan,
Rajah Sahib,
Ettiaiyapuram.

7—3—64.

After an interval of 11 years I have had the good fortune of visiting this sacred shrine to day. The temple has been renovated and a number of Kavachams and Jewellery have been added since.

The temple is maintained in an excellant condition.

(Sd.) T. K. Palaniappan (I. A. S.)
(Chairman, Port Trust, Madras.)

15—3—64.

சிவவழிபாடும் சங்க நூல்களும்

செஞ்சொற்கொண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.

(மலர் 23, இதழ் 4, பக்கம் 217 இன் தொடர்ச்சி)

ஏறுகளும் இறைவனும்

எருதுகளைத் தம்மிற் கலந்து தொழுவத்திலே புகவிட்ட நிலையில் அவற்றை ஒவ்வொன்ருகக் கூறிவரும்போது சோழன் நல்லுருத்திரனுர் கரிய சருச்சரையை யுடைய கழுத்தினையும், ஏந்திய குட்டேற்றத்தினையும் உடைய குரால் நிறத்தினை உடைய ஏற்றினைப் பெரும் பெயர்க் கணிச்சியோனும் திருநீலகண்டனுமாகிய சிவபிரானுக்கு உவமையாக்குதல் முல்லைக்கலியில் கண்டு இன்புறத்தக்க பகுதியாகும்.[1]

அந்தம் ஆதி அரனே

பல உலகங்களில் உயிர்கள் எல்லாம் பழைய ஊழிக்காலத்திலே பிறந்திறந்து தடுமாறித் திரியும்படி அயனுய் நின்று படைத்த முதல்வனும் இறையவன் அரனுக நின்று அவ்வுயிரெல்லாம் தன்னிடத்தே வந்து தொகுதலை விரும்பி ஊழி முடிந்தபிறகு தன்னிடத்து மீட்டும் ஒடுக்கிக்கொள்வதைப் போல, ஞாயிறு தன் கதிர்களை மீட்டும் தன்னிடத்தே ஒடுக்கிக் கொள்ளும் அந்திநேரம் என்று நெய்தற் கலியிலே ஆசிரியர் நல்லந்துவனுர் பாடும் அருமையான பாடற் பகுதியின் மாட்சி பயிலுந்தோறும் இனிது புலனுகும்.[2] சிவஞானபோதம் முதற் சூத்திரக் கருத்து இக்கலித்தொகைப் பகுதியிலேயே குறிப்பாக வெளிப்பட்டிருத்தல் காண்க. மேலும், உயிர்கள் (பசு) பல என்பதும், இறைவன் (பதி) ஒருவனே என்பதும், பிறப்பிறப்புக்களாகிய (பாசம்) உலகத் துன்பங்கள் உள என்பதும் இங்கு உணர்த்துதல் காண்க.

---

[1] முல்லைக்கலி - 4, 5, [2] நெய்தற்கலி - 12; அரியாகிக் காப்பான் அயனுய்ப் படைப்பான், அரனுயழிப்பவனுந் தானே' - என்ற திருக்கயிலாய ஞான உலாவுடன் ஒப்பிடுக.

இச் சிந்தனை சங்க நூல்களிலேயே தோன்றியிருக்குமாயின், சிவ வழிபாடும் அதன் மாட்சிகளும் குறித்த தொன்மையும் நன்மையும் நன்கு விளங்குமல்லவா ?

ஆதிரையான் பெருமான் :

நெய்தற்கலியோடு கலித்தொகை நிறைவு பெறுகிறது. நெய்தற்கலியைப் பாடியவர் நல்லந் துவனர் என்பர். கலித் தொகையின் முதற் பதிப்பில் (1887) பேரறிஞர் ஈழந்தந்த இன்ற மிழ்ச்செம்மல், திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் "நல்லந்துவனர் கலித்தொகை" என்று குறிப்பிட்டுள்ளார்கள். வையாபுரிப்பிள்ளை யவர்களும்கூட இக்கருத்துடையவர்களே ஆவார்கள். கோத்தவர் ஆகிய நல்லந்துவனர் கலித்தொகை முற்றும் சிவமணம் கமழும்படிச் செய்துள்ளார் என்றே கூறலாம். சிவபிரானைப்பற்றிய வாழ்த்துடன் தொடங்கும் கலித் தொகை முடியும்போதும் சிவபிரான் திருப் புகழோடுதான் முடி கிறது; பொருள்வயிற் பிரிந்த தலைவனை நினைந்து ஆற்ருமை கொண்ட ஒருதலைவியை அவள் தோழி ஆற்றுவிக்கிருள். பாலை யின் வெம்மைக்குச் சிவபிரான் முப்புரத்தை எரிசெய்த அன்று பிறந்த வெம்மையை உவமை கூறுகிருள்;

"அயந்திகழ் நறுங்கொன்றை அலங்கலந் தெரியலான்
இயங்கு எயில் எயப்பிறந்த எரிபோல் எவ்வாயும்
கனைகதிர் தெறுதலின்."

பிறங்குநீர் சடைக்கரந்தான் அணிஅன்ன. உருவவேற்றூர்தி யான் ஒள்அணி நக்கன்ன, புதுத்திங்கட் கண்ணியான் பொன் பூண் ஞான்றன்ன என்று மூன்று தாழிசைகளிலும் முழுமுதலோ னைப் பரவுவதுடன், சுரிதகத்திலும் "அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த பெருந்தண் செண்பகம்போல" த் தலைவர் பொய்யார் என்று முடிக்கின்ருள் தோழி. இவ்விடத்து இறைவனை, "அரும்பெறல் ஆதிரையான்" எனக் கூறுதலை அறிதல் வேண்டும். சிவபிரானுக்குரிய திருநட்சத்திரம் ஆதிரை என்பதை இங்கே அறிந்து இன்புறலாம்.

ஐம்படைத்தாலியில் ஆனேறு;

குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி' என்ற அணியினை அணி வது பழையகால வழக்கம். அஃது இருவகையாக அணியப்பட்டு வந்திருக்கிறது. கலித்தொகையிலே மருதனிள நாகனர் ஒரு

வகையினை உரைக்கின்றார்.[1] அதனைக்காணும்போது சிவபிரானை மக்கள் எப்படி ஏத்திப்பரவி நினைவுகொண் டிருந்தனர் என்பது விளங்கும். வாள், மழு, ஆனேற்றுப்பூண், முத்துவடம், மாலை ஆகியவை அணிந்து தோன்றும் தன் சிறுமகனைப் பாராட்டிப் பால் ஊட்டுகின்றாள் தலைவி. உன் தந்தைக்காக இதனை உண் பாயாக என்றும், உன் தாயர்க்காக இதனை உண்பாயாக என்றும் பலபேச்சுக்களை விளையாட்டாகக்கூறித் தலைவி உண்பிப்பதாகப் புலவர் கூறுகின்றார். அச்சிறு புதல்வன் அணிவகைகளைக் குறிக் குங்காலத்தேயே இவ்வணிவகையினைக் காண்கின்றோம்.

“ பூண்டவை, எறியா வாளும் எற்று மழுவும்
செறியக் கட்டி ஈரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆனேற் றவிர்பூண் ”

எனவரும் வரிகளில் இக்கருத்தினைக் கண்டு இன்புறலாம்.

‘ ஓரம்பே முப்புரம் ’

நான்முகனாகிய பாகன் வேதமாகிய குதிரைகளை ஓட்டுகிறான்; அப்பூமியாகிய தேரை யேறி வாசுகி நாணாக இமயம் வில்லாக திரி புரங்கள் ஓரம்பால் வேவுமாறு எய்தவன் சிவபிரான்; அவி உணவு ஏற்கும் அருந்திறலினன்: அச்சிவபிரான் உமையொடு கூடிக் களித்தனன் என்று பரிபாடல் பகர்கின்றது;[2]

“ ஆதியந்தணன் அறிந்துபரி கொளுவ
வேதமாபூண் வையத்தேர் ஊர்ந்து
நாக நாண மலைவில்லாக
மூவகை, ஆரெயில் ஓரழலம்பின்முனிய
மாதிரம் அழல எய்து அமரர்வேள்விப்
பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான்
உமையொடு புணர்ந்த காமவதுவையுள் ”

என்று இச்செய்தியை இனிக்கப்பாடும் பாவலர் கடுவனிள வெயின னார் ஆவர். “ஓங்குமலைப் பெருவிறற் பாம்பு நாண் கொளீஇ, ஒரு கணை கொண்டு மூவெயில் உடற்றி, பெருவிறல் அமரர்க்கு வென்றிதந்த, கறைமிடற்று அண்ணல்” என்று மருதனிள நாகனார் பாடும் புறநானூற்றுப் பாடல் இங்கே ஒப்பிடத்தக்கது.

---

[1] மருதக்கலி 20- [2] பரிபடல் - 5: 22-23 வரிகள். [3] புறம்-55[3]

ஏனைய கடவுளர் :

இவ்வாறே. கொற்றவை, முருகன், திருமால், பலதேவன், கண்ணன். இந்திரன் முதலிய கடவுளர் பற்றிய எண்ணிக்கை மீறிய பல்வேறு கருத்துக்களைச் சங்க நூல்களிற் காணலாம். இவற்றை யெல்லாம் ஒத்துவைத்து நோக்குங்கால், கடவுளர் வழிபாட்டில் சிறந்து நின்ற பழந்தமிழர் வாழ்வியல் மாட்சி விளங்கும் "பிறவாயாக்கைப்பெரியோன்" என்று இளங்கோவடிகளாற் பாராட்டப்பெற்ற சிவபிரானைச் சங்க நூல்களில் 'பெருந்தேவ'னைக் காணலாம். அதற்குற்ற சிந்தனையைத் தூண்டித் தமிழர் வழிபாட்டுத் தொன்மையைத் துலக்குவதே இக்கட்டுரையின் குறிக்கோள்.

செம்பொருள் துணிவு :

சங்ககாலத்தில் சிவ வழிபாடு நிலைத்துப் பெருகியிருந்த காரணத்தாலேயே பாவலர்கள் அப்பெருமானைக் குறித்து ஆங்காங்குப்பாடியுள்ளனர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் குடை முக்கட் செல்வர் திருக்கோயில் வலம் வருதற்கே தாழும் என்று புறம் கூறுகிறது. [1]திருக்கோயிலுக்குச் சென்று வலம் வந்து வழிபடுதல் பற்றிய மேற்கோள்கள் பலவற்றைச் சங்கநூல்களிற் காணலாம். [2]அவையனைத்தும் இங்குத்தொகுத்துக் காட்டுவதோ, அன்றிப் பெருக்கிக் காட்டுவதோ நம் நோக்கம் அன்று. அவற்றால் அறியப்படும் செய்தியினைக் குறித்தலே நோக்கமாகும். 'செம்பொருள் காண்பது அறிவு' என்றார் திருவள்ளுவர். இச் செம்பொருளையே தமிழர் சிவம் என்று வழிப்பட்டனர். (சிவம். சிவப்பு, செம்மை எனக்காண்க) 'இச்செம்பொருள் துணிவே' நம் சித்தாந்த நெறியாகும். இந்நெறியின் வடிவாகவே நம் இறைவன் உள்ளான். ஆதலின் அப்பெருமானையே 'செம்பொருள் துணிவே' என்று விளித்தார் மணிவாசகப் பெருமான். [3]இச் சிவ வழிபாடு பற்றிச் சங்க நூல்கள் கூறும் செய்திகளைப் பிற்காலத்துச் சைவ சமய தோத்திர சாத்திர நூல்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்தால் அவை புதுப்புதுக் கருத்துக்களை நல்கி இன்புறுத்தும் என்பதற்கு ஐயமும் உண்டோ?

---

[1] புறம் - பா 6; காரிகிழார் அருளியது. [2] கலி - பா 82, 84; முதலியன காண்க. [3] திருவாசகம் - 37 - பா , 1காண்க.

தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

(மலர் 23, இதழ் 4, பக்கம் 224 இன் தொடர்ச்சி)

4. உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமாறு :

உயர்திணைப் பெயரில் இ. உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிரீறும் (3), ன, ர, ல, ள என்னும் நான்கு புள்ளியீறும் (11) விளி ஏற்பனவாம்.

(அ) உயிரீறுகள் விளியேற்குமாறு :

நம்பி என்பது நம்பீ என வருதல் போல 'இகர' ஈற்றுப் பெயர் 'ஈ கார'மாயும், நங்கை என்பது நங்காய் என வருதல் போல 'ஐகார' ஈற்றுப்பெயர் 'ஆய்' ஆயும் திரிந்து விளியேற்கும். (4)

கோ என்பது கோவே என வருதல்போல ஓகார ஈற்றுப் பெயர் ஏகார ஈறுயும், வேந்து என்பது வேந்தே என வருதல் போல உகர ஈற்றுப்பெயர் ஏகாரமாயும் விளியேற்கும் (5) ஈண்டுக் கூறப்பட்ட உகரம் குற்றியலுகரமாகும். திரு என்பது திருவே எனச் சிறுபான்மை முற்றியலுகரமும் விளியேற்கும். (6)

தன் அளவின் மிக்கு ஒலிக்கும் இகர ஈற்று அளபெடைப் பெயர் 'இ ஈயாகும்' என்னும் விதிப்படி ஈயாகாது இயல்பாய் விளியேற்கும் (8). இ, உ. ஐ, ஓ என்னும் நான்கு ஈற்றுச் சொற்களும் அண்மைக்கண் விளியேற்கும்போது இயல்பாய் விளியேற்கும் (10).

(ஆ) புள்ளியீறுகள் விளியேற்குமாறு :

ன, ர, ல, ள என்னும் நான்கு ஈற்றுப் புள்ளியீறுகளும் விளியேற்கும். அவற்றுள் 'அன்' ஈறு 'ஆ'வாய் விளி ஏற்கும்

(13). இவ் அன்னீறு அண்மை விளியாக வருகிறபோது அகர மாகும் (14). 'ஆன்' என்னும் ஈற்றுப் பெயரும் இயல்பாய் விளியேற்கும் (15) வினைச் சொல்லில் வரும் ஆன் ஈறும், பண்புப் பெயரில் வரும் ஆன் ஈறும், ஆயாய் விளியேற்கும் (16, 17). தன் அளவில் மீக்கு ஒலிக்கும் ஆன் ஈற்று அளபெடைப்பெயர் இயல்பாய் விளியேற்கும் (18).

கூத்தர் என்பது கூத்திர் எனவும் பார்ப்பார் என்பது பார்ப்பீர் எனவும் வருதல் போல அர், ஆர் என்னும் இரண்டீற்றுப் பெயரும் 'ஈர்' ஆய்திரிந்து விளியேற்கும் (21). வினையாலணை யும் பெயரிலும், பண்புப் பெயரிலும் வரும் அர், ஆர் என்னும் இரண்டீறும் 'ஈர்' என்பதனோடு ஏகாரம் பெற்று வரும் (22, 23) தன் அளவில் மிக்கு ஒலிக்கும் ரகார ஈற்று அளபெடைப் பெயர் இயல்பாய் விளியேற்கும் (24)

லகர, ளகார ஈற்றுப் பெயர்கள் ஈற்றயல் எழுத்து நீண்டு விளியேற்கும் (27). அவ்வீறுகளின் அயலெழுத்து நெட்டெழுத் தாயின் இயல்பாய் விளி ஏற்கும் (28). வினையாலணையும் பெயர்க்கண்ணும், பண்புப் பெயர்க்கண்ணும் வரும் ஆள் ஈற்றுப் பெயர் (நின்ருன் என்பது நின்ருய் என வருதல் போல) இயல் பாகாது ஆயாய் விளி ஏற்கும் (29)- தன் அளவில் மிக்கு ஒலிக்கும் லகர, ளகார, ஈற்று அளபெடைப்பெயர் இயல்பாய் விளியேற்கும் (32.

5. உயர்திணை விரவுப்பெயர்கள் விளியேற்குமாறு :

அன்னை என்பது அன்னய் என்றும் அத்தை என்பது அத்தா என்றும் வருதல் போல ஐகார ஈற்று உயர்திணை விரவுப்பெயர் ஆய் என்றும், ஆ வென்றும் திரிந்து விளி யேற்கும் (9) மகன் என்பது மகனே என்றும், மகள் என்பது மகளே என்றும் வருதல் போல னகர, ளகார ஈற்று முறைப் பெயர்கள் ஏகாரம் பெற்று விளியேற்கும் (19, 30).

6. அஃறிணைப்பெயர்கள் விளியேற்குமாறு :

புள்ளியீறும் உயிரீறுமாக உள்ள அஃறிணைப் பெயர் களெல்லாம் விளிகொள்ளும் காலம் தோன்றின் ஏகாரம் பெற்று விளியேற்கும். மரம், மரமே எனவும்; அணில், அணிலே எனவும் விளியேற்பன இதற்கு உதாரணமாம் (34)

7. அஃறிணை விரவுப்பெயர்கள் விளியேற்குமாறு:-

அஃறிணை விரவுப்பெயரில் இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிரீறும், ன, ர, ல, ள, என்னும் நான்கு புள்ளியீறும் விளி யேற்பனவாம். இவ்வெட்டு ஈறுகளையும் உடைய உயர்திணைப் பெயர்கள் எவ்வாறு விளியேற்றனவோ அவ்வாறே இவையும் விளியேற்கும் (33)

8. விளியேலாப் பெயர்கள் :-

உயர்திணைப் பெயர்களில் இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிரீறுகளும் தவிர ஏனைய விளியேலா (7, 12) னகர ஈற்றுள் அவன், இவன், உவன், யான், யாவன் என்பன விளியேலா (20) ரகர ஈற்றுள் அவர், இவர், உவர் என்பன விளியேலா (25) ளகர ஈற்றுள் அவள், இவள், உவள், யாவள் என்பன விளி யேலா (31). த, ந, நு, எ என்பனவற்றை முதலாக ன, ர, ள என்பனவற்றை இறுதியாக உடையனவாகிய தமன், தமர், தமள், நமன், நமர், நமள், நுமன், நுமர், நுமள், எமன், எமர், எமள், தம்மான், தம்மார், தம்மாள், நம்மான், நம்மார், நம்மாள், நும்மான். நும்மார், நும்மாள் ; எம்மான், எம்மாள் என்பன போன்ற பெயர்களும், மற்றையான், மற்றையார், மற்றையாள் ; பிறன், பிறர், பிறள் என்று வருவனவுமாகிய பெயர்களும் விளியேலா (37).

உயர்திணை விரவுப் பெயரில் தான், நீயிர் என்பன விளி யேலா (20, 26).

அஃறிணைப் பெயர்களில் விளியேலாதன இவையென வரையறுக்கப்படவில்லை. எனினும் அது, இது, உது ; அஃது, உஃது ; அவை, இவை, உவை ; அவ், இவ், உவ் ; யாது, யா, யாவை என்பன போல்வன விளியேலாவாம்.

அஃறிணை விரவுப் பெயர்களில் இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிரீறுகளும், ன, ர, ல, ள என்னும் நான்கு புள்ளி யீறுகளும் தவிர ஏனைய விளியேலாவாம்.

“நுவ்வொடு வினச்சுட் டுற்ற னளர
வைதுத் தாந்தா னின்னன விளியா” (பெய. 57)

என நன்னூலாரும் இவ்விளியேலாப் பெயர்களைத் தொகுத்துக் கூறுமாறு காண்க.

௯. புறநடை :

அம்ம என்னும் அசைச்சொல் விளி கொள்ளும் பெயரோடு தோன்றாது. இடைச் சொற்களோடு தோன்றியதாக இருப்பினும் 'அம்ம சாத்தா' என வருதலின் அதனையும் விளியெனவே கொள்வர் (36).

உயர்திணைக்கண்ணும், அஃறிணைக்கண்ணும் விளி ஏற்பனவாகக் கூறப்பட்ட எல்லாப் பெயர்களும் சேய்மைக்கண் விளிக்குங்கால் அளபிறந்து ஒலிக்கும். "அண்மைச் சொல்லே இயற்கையாகும்" என அண்மை விளிக்கண் இயல்பாய் விளியேற்குமென்றார். ஈண்டுச் சேய்மை விளிக்கண் அளபிறந்து விளியேற்கும் என்றார். இதனைத் தழுவியே "அண்மையின் இயல்பும் சேய்மையின் அளபுமாய்" (பெய. 56) விளியேற்கும் என்று நன்னூலாரும் கூறுவாராயினர் (35).

[தொடரும்]

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

3—4—64 மாலை 8-30 மணியளவில் திருக்கடவூர் புண்ணிய க்ஷேத்திரத்திற்கு நானும் மற்றும் ஐந்து அன்பர்களுடன் வந்திறங்கினோம். இறங்கியவுடன் திருக்கோயில் அன்பர்கம் கண்டோம். அவர்கள் எங்களை உடன் அழைத்துச்சென்று கோவிலின் மூர்த்திகளையும், அம்மனையும் தரிசிக்கவைத்து எங்களைப் பேரானந்தத்தில் மூழ்கவைத்தார்கள் திருக்கோவில் மிகவும் சுத்தமாகவும் உள்ளே சென்றவர்கட்குத், தங்களையும் மறந்து பேரின்பந்தரவல்ல முறையில் அமைந்திருப்பது கண்டு இத் தேவஸ்தானத்தை நடத்திவருபவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. திருக்கோவில் தரிசிக்கவரும் அன்பர்களை நல்லமுறையில் கவனிப்பதுடன் தேவஸ்தானம் புகழைப் பரவச் செய்வதுகண்டு மகிழ்கின்றோம். இத் திருக்கோயில் நிர்வாகம் சிறந்தமுறையில் நடந்துவருவது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். மேன்மைதங்கிய தருமபுரம் ஆதீனகர்த்தர் அவர்களின் மேற்பார்வையில் இங்குப் பல நல்ல பணிகள் நடைபெறுவது கண்டு ஷை ஆதீனகர்த்தர் அவர்களை பெரிதும் பாராட்டுகின்றோம். இந்த அறநிலையப் பணிகள் மென்மேலும் சிறந்து வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(Sd.) A. Senapathi, M. L. A.
Pattagar Nilayam,
Dharapuram, Coimbatore Dt.

தருமம் என்று ஒரு பொருள்

திரு. வ. குகசர்மா

தருமம் அல்லது அறம் என்பது தமிழ்நாட்டின் தலைசிறந்த பண்பு. சைவ சமயத்தின் ஆணிவேர். தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார் தமது ஆத்திசூடியில் கடவுள் வணக்கத்திற்கு அடுத்தபடியாக "அறஞ்செய விரும்பு" என்று கூறியுள்ளார். இறைவனுக்கு அடுத்தபடியாகவும் இறைவனையடையும் மார்க்க மாகவும் உள்ளது அறம்.

தருமம் என்றால் என்ன ? அது ஒரு பொருளா ? அன்றேல் பல பொருட்களா ? தருமம் என்பது நாம் செய்யும் எல்லாத் தொழில்களிலும் மறைந்து நிற்கின்றது. தருமம் இல்லாத தொழில்கள் அதன் தன்மையையே இழந்துவிடும். யுத்தத்திலே தருமம் உண்டு. அரசியலிலே தருமம் உண்டு. உதாரணமாக "மனுநீதி கண்ட சோழன் கதையை எடுத்துக்கொள்ளலாம். பசுவின் கன்றை நெறித்தவன்தன் மகன். அதுவும் ஒரேயொரு மகன். அவன் பின்னால் அரசாளவேண்டியவன். இக்காரணங் கள் ஒன்றும் அரசன் மனதில் நிலைபெறவில்லை. "தருமம்" என்னும் பொருள்தான் மனதில் நிலைபெறுகிறது. இந்நிலையைச் சேக்கிழார்,

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்"

என்று வெகு தெளிவாக எடுத்துச்சொல்கிறார். தருமத்தின் வழியில் செல்லவேண்டும். மாறிச்சென்றால் தாங்கள் அழிய நேரிடும் என்று அரசரும் அஞ்சினர். "அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்" என்னும் மூதுரை இதனை நன்கு விளக்கும்.

தருமத்தை இரண்டாக வகுத்தார் திருவள்ளுவர். இல்லறம் துறவறம் என்பன அவை. அவற்றுள் இங்கே கூறப்பட்ட இரு அறவழியில் நிற்போரும் கடைப்பிடிக்கவேண்டிய பல உப அறவழிகளை வகுத்தார். தருமம் முப்பத்திரண்டு வகைப்படும்

என்று கூறுவர் ஒரு சாரார். உமாதேவியார் இந்த அறங்களை வளர்த்தார் என்று கூறுவர்.

"சமய மாடுனையும் தாயென
வளர்த்துச் சராசர அணுக்களுய்ந்திடுவான்
அமைதரு மெண்ணுன் கறத்தினைப் போற்றி
ஆதி பீடத்தில்வீற் றிருக்கும்
உமையமர் காமக்கோட்டி......

என்பது கந்தபுராணம். இதனுல் உமாதேவியாருக்கு "அறக் கொடி" என்றும் ஒரு பெயர் உண்டு. இத்தரும வழிகளை உபதேசித்தவர் இறைவன். "கல்லால் நிழல் மேவிக் காமுறுசீர் நால்வர்க்கன்றெல்லா அறனுரையும் இன்னருளாற் சொல்லினுன். என்பது ஞானசம்பந்தர் தேவாரம். முப்பத்திரண்டு அறங் களுக்குள்ளே சிலவற்றைத் திருமூலர் எடுத்துக்காட்டுகிருர்.

"யாவர்க்குமாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

திருமூலரால் காட்டப்படும் இத்தருமங்கள் யாவராலும் எளி தாகக் கடைப்பிடிக்கத்தக்கன. உபநிஷத்துக்கள் தருமத்தை எட்டு வகையாகப் பிரிக்கின்றன. அவை யக்ஞம், அத்தியயனம், தர்னம், தவம், ஸத்தியம், பொறுமை, தளராமை, லோபமின்மை என்பனவாம். இதிலே யக்ஞம், தானம், தவம், மூன்றுமே பிரதானமாகக் கூறப்பட்டுள்ளன. ஏன்? இவை மூன்றுமே தியாகமாகக் கருதப்படுதலே யக்ஞம் தேவர்களை உத்தேசித்துச் செய்யப்படுவது. தானமாவது மனிதர்களுக்குச் செய்யும் உதவி, தவம் என்பது தன்னடக்கம். அதாவது பிறர் தமக்குச்செய்யும் துன்பத்தைப் பொறுத்தல். அதற்குப் பதில் பிறருக்குத் துன்பம் செய்யாமை. தவத்தினுலே ஒருவன் கோபத்தை விட்டுவிடுகிருன். தரும வழியில் நடப்பவன் தனது சுகபோகங்களை மனைவி மக்களைக்கூட தியாகம்செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படு கின்றது. வாய்மை என்னும் அறவழியில் நின்று அரிச்சந்திரன் அரச போகத்தையும் மனைவி மக்களையும் துறந்தான்.

இறைவனிடத்திலே தன் உடல், பொருள், ஆவி யாவற்றை யும் ஒப்புவித்தல் முத்தி நிலைக்கு வழிகோலுவதாகும் தனக் கென்று ஒன்றுமில்லாத நிலையே சிறந்த நிலை. இந்த நிலையே மணிவாசகர் அடைந்தார் என்பதை.

" அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடமை எல்லாம்
குன்றே யனையார் எனை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ "

என அவர் பாடிய திருவாசகப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

இவ்வாறு ஆராய்ந்தால் தருமம் என்பது கொடைதான் என்பது தெளிவு இல்லற தருமத்தில் வாழ்பவன் தாம் தரும வழியில்நின்று சம்பாதிக்கும் பொருளின் ஒருபகுதியை பிறர்க்குத் தியாகம் செய்வதால் அவன் இல்லற தருமத்தில் சிறப்புற்றோங்கு கிறான். இல்லற தருமத்தின் சிறப்பைக் கந்தபுராணம் பின் வருமாறு கூறுகிறது.

" துறந்தவர்கள் வேண்டியதொர் துப்புரவு நல்கி
இறந்தவர்கள் காமுறும் இருங்கடன் இயற்றி
அறம்பலவும் ஆற்றிவிருந் தோம்பு முறை யல்லால்
பிறந்தநெறி யாலுளதொர் பேருதவி யாதோ "

இந்த உலகில் சிலர் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். சிலர் நோய் வறுமை முதலியவற்றால் துன்பப்படுகிறார்கள். இதற்கு ஒரு காரணத்தைத் திருமூலர் கூறுகிறார். " இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும் தருமஞ் செய்யாதவர் தம்பாலதாகும் " என்று சொல்கிறார். இறைவன் பாதத்தை அடையும் மார்க்கமே அறம். " அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும் திறம் அறியார் " என்பது திருமூலர் வாக்கு. எனவே தருமம் இம்மையும், மறுமையும் இன்பம்தர வல்லது. அது அருமையான பொருள், முத்தியடையும் மார்க்க நெறியில் நிற்பவரே அதன் தன்மையை அறியவல்லவர்,

" தருமமென் றொருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்கு மால்
அருமையில் வருபொரு ளாகு மன்னதும்
ஒருமை யிலோர்க் கலால் உணர்தற்கொண்ணுமோ "

கந்தபுராணம் காசிபனுபதேசம் 12.

சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 23, இதழ் 4. பக்கம் 248 இன் தொடர்ச்சி)

वामदेवं विरूपाक्षं चोत्तरेतु विशेषतः ।
अग्रेचोपनिषद्रौद्रं पुराणानि पठेत्क्रमात् ॥ 311

வாமதேவம், விரூபாக்ஷம், தேவவ்ருதம், ஜ்யேஷ்டசாமம், புருஷவ்ருதம் என்ற மந்திரங்களை வடதிசையிலும் இதுபோல் எதிரில் உபநிஷத்துக்களையும் புராணங்களையும் பாராயணம் செய்யவேண்டும்.

आचार्योमूर्त्तिपैस्साकं ततो होमं समाचरेत् ।
होमारंभस्य पूर्वेतु स्रुक्स्रुवौ चेन्धनं तुषम् ॥ 312

परिधींश्चै व दर्भाणि समिदाज्य चरूंस्तथा ।
होमद्रव्याणि सर्वाणि गन्धपुष्पं च धूपकम् ॥ 313

दीपं वै द्रव्यपात्राणि ह्यरणीं च कमण्डलुम् ।
वर्धनीमक्षतं दर्वीं संप्राप्य होमसाधनम् ॥ 314

இவ்வாறு வேதபாராயணம் முதலிய பாராயணங்களுடன் விதிமுறை வழுவாது பூஜைகளைச்செய்து ருத்விக்குகளுடன் கூடிய ஆசாரியன் ஹோமத்தை ஆரம்பிக்கவேண்டும். ஹோமம் ஆரம்பிப்பதற்குமுன் ஹோமம் செய்வதற்கு வேண்டியதான உபகரணங்களைச் சேர்த்துவைத்துக்கொள்ளவேண்டும். அதாவது சுருக், சுருவம், சமித்து, உமி, பரிதி, தர்ப்பை, விறகு, நெய், சரு, முதலிய ஹோமத்திரவியங்களையும் சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், அரணி, கமண்டலு, வர்த்தனீ, அக்ஷதை, தர்வி என்ற இந்த சாமான்களையும் அருகில் வைத்துக்கொண்டு ஹோமம் செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

आहृत्य होम सम्भरानेवं कुण्डंप्रति क्रमात् ।
प्रधाने देशिकः प्रोक्तस्त्वन्य कुण्डेषु मूर्त्तिपाः ॥ 315

कुण्ड संस्कार पूर्वंतु शैवाग्निं साधयेत्ततः ।
असंस्कृतेषु कुण्डेषु हुतं भवति निष्फलम ॥ 316

तस्मात्कुण्डस्य संस्कारं कुर्यादस्त्रेणदेशिकः ।
कुण्डस्य मेखलायांतु परिध्यादीन् न्यसेद्गुरुः ॥ 317

ஹோமம் செய்வதற்குரிய சாதனங்களை சேகரம் செய்து வைத்துக்கொண்டு ஹோமம் செய்ய ஆரம்பம் செய்யவேண்டும். நவகுண்டபக்ஷமாயினும் பஞ்சகுண்ட பக்ஷமாயினும் அல்லது ஏக குண்டபக்ஷமாயினும் ஒவ்வொரு குண்டத்திற்கும் முன் கூறப்பட்டபடி ஹோம சாதனங்களைச் சேர்த்துவைத்துக்கொள்ள வேண்டும், ப்ரதான குண்டத்தில் ஆசாரியரும் சுற்றிலுமுள்ள குண்டங்களில் ருத்விக்குகளும் ஹோமம் செய்யவேண்டும், ஒவ்வொரு குண்டத்திற்கும் ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். குண்ட ஸம்ஸ்காரம் என்பது பதினெட்டு எண்களை உடையது. அதாவது, 1. நீரீக்ஷணம், 2. ப்ரோக்ஷணம், 3. தாடனம், 4. அப்யுக்ஷணம், 5. கனனம், 6. அவகிரணம், 7. பூரணம், 8. சமீகரணம், 9. சேசனம், 10. குட்டனம், 11. சம்மார்ஜனம், 12. சமாலேபனம், 13. கலாமயகல்பனம், 14. த்ருசூத்ரவேஷ்டனம், 15. கலாமயகல்ப்பனம், 16. ரேகாசதுஷ்டய வின்யாஸம், 17. வஜ்ரீகரணம், 18. சதுஷ்பதநியாஸம் என்பவைகளாகும். இவ்வாறு ஸம்ஸ்காரம் செய்யப்படாத குண்டத்தில் ஹோமம் செய்தால் அது பயனற்றதாகும். இங்கு கூறப்பட்ட ஒவ்வொரு ஸம்ஸ்காரத்திற்கு உரிய மந்திரம்சொல்லி பாவித்து அததற்குரிய முத்திரையாகிய கிரியையுடன் செய்ய வேண்டும். இவ்வாறு ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட குண்டத்தில் ஹோமம் செய்தால் மிகுந்த பலனைத்தரும். இவ்வாறு ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட குண்டத்தின் மேகலைகளில், பரிதி முதலியவைகளை வைக்கவேண்டும். மேகலை என்பது குண்டத்தின் வெளிப்பாகத்தில் அக்குண்ட வடிவமான மூன்று படிக்கட்டு போன்ற அமைப்பு. இதில் பரிதி விஷ்டரம் பரிஸ்தரணம் என்ற மூன்றையும் வரிசையாகப் போடவேண்டும்.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவில் :



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் அன்பர்களும்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
அன்பர்களுடன் ஸ்ரீ சனிபகவானைத் தரிசனம் செய்தருளல்.

द्वितालमात्रकायामं कनिष्ठांगुळि नाहकम् ।
अवक्राश्चाव्रणाश्चैव श्यामाः परिधयः क्रमात् ॥ 318

पूर्वाग्रौ चोत्तराग्रौ च पूर्वादि मेखलोपरि।
त्रिंशद्दर्भ समायुक्तान्वितस्तिद्वय दीर्घकान् ॥ 319

वेणितान्वर्त्तितं वापि विष्टरानार्द्र संयुतान् ।
दक्षिणावर्त ग्रथितान्विन्य सेन्मध्यमेखले ॥ 320

பரிதிகள் யாவும் ஒருமுழ நீளமுள்ளதாயும் பெருவிரல் பருமனுள்ளதாயும் கோணலில்லாததும், காயம்படாததுமாக இருக்கவேண்டும். கிழக்கு நுனியாகவும் வடக்கு நுனியாகவும் போடவேண்டும். மேல் மேகலையில் வைக்கப்படவேண்டும். இது போல் முப்பது தர்ப்பங்களைக் கொண்டு முடியப்பட்டதாய் ஒருமுழ நீளமுள்ளதாய், சுற்றப்பட்டோ அல்லது பின்னப் பட்டோ உள்ளதாய், பச்சையாய் வலமாகச் சுற்றி முடியப்பட்ட தான விஷடரத்தை நடுமேகலையில் வைக்கவேண்டும்.

षट्त्रिंशाङ्गुलमायामं ग्रन्थिपक्षांगुलान्वितम् ।
अग्रंत्रेदांगुलं प्रोक्तं दर्भैष्षोडशभिर्युतम् ॥ 321

परिस्तरण मेवंस्यान्मेखलायामधोक्षिपेत् ।
मुष्टिमात्रंक्षिपेल्लाजान्मेखलोर्ध्वे चतुर्दिशि ॥ 322

विकिरेल्लाज पुष्पैश्च कुण्डशेषमशेषकम् ।

முப்பத்தாறு அங்குல நீளமுள்ளதாயும் அதன் முடிச்சு பதினைந்து அங்குலமுள்ளதாயும் நுனி நான்கு அங்குலமுள்ள தாயும் பதினாறு தர்ப்பங்களால் ஆக்கப்பட்டதாயுமிருக்கும் பரிஸ்தரணத்தை அடியிலிருக்கும் மேகலையில் சுற்றிலும் போட வேண்டும். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்ற திக்குகளில் மேல் மேகலையில் பிடிப்பிடியாக லாஜபுஷ்பங்களை வைக்க வேண்டும். பிறகு மற்ற மேகலைகளில் லாஜங்களை இறைக்க வேண்டும்.

ब्रह्माणमच्युतं रुद्रमनन्तं परिधौयजेत् ॥ 323

विष्टरेषु च लोकेशान् वज्रादींस्तरणेयजेत् ।
एवमेव प्रकारेण पूजयेद्देशिकोत्तमः ॥ 324

பரிதியில், பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், அனந்தன் என்ற நால்வரையும் விஷ்டரங்களில் இந்திரன் முதலிய லோகபாலர் களையும். பரிஸ்தரணங்களில் வஜ்ரம் முதலிய ஆயுதங்களையும் பூஜிக்கவேண்டும். சிரேஷ்டனான ஆசாரியன் இம்முறை தவறாது முறையாகப் பூஜிக்கவேண்டும்.. முதலில் குண்ட ஸம்ஸ்காரம் செய்து பிறகு சிவாக்னியை ப்ரதிஷ்டை செய்து கொண்டு அவ்வக்னியின் ரக்ஷையின்பொருட்டு பரிஸ்தரணம் முதலானவைகள் போடப்படவேண்டும். சிவாக்னி என்பது மிகவும் இன்றியமையாததான அக்னி, இந்த அக்னியிலிருந்து தான் மற்றய ஆஹவனீயம் முதலிய எட்டு அக்னிகளும் தோன் றிற்று. (வாகீச்வரி என்ற தேவியினிடத்தில் வாகீச்வரன் என்ற இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட அக்னியே சிவாக்னி.)

प्रधान कुण्डे प्रथमं शिवाग्नेश्च समुद्भवः ।
आचार्योविधिना कृत्वा तत्तत्कुण्डेषुतंक्षिपेत् ॥ 325

तत्रतत्रासनं कल्प्य तत्तन्मूर्त्तिं प्रकल्पयेत् ।
तत्तत्कुण्डस्य वह्नीनां नाम वच्मि यथाक्रमम् ॥ 326

முதலில் ப்ரதான குண்டத்தில் சிவாக்னியின் தோற்றமானது உண்டாயிற்று. ஆசாரியனானவன் அந்த சிவாக்னியை முறைப்படி தோற்றமுடையதாகச்செய்து (ஸ்தாபித்து) கிழக்கு முதலிய திக்குகளில் உள்ள குண்டங்களில் பிரித்து ஸ்தாபிக்கவேண்டும். அந்தஅந்த குண்டத்தில் இடப்பட்ட அக்னியை ஆஸனம் மூர்த்தியை கல்பித்துப் பூஜிக்கவேண்டும். அந்தந்த குண்டத்தி லுள்ள அக்னியின் பெயர் இவ்வாறு வரிசைப்படி கூறப்படுகிறது.

[தொடரும்]

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

(மலர் 23, இதழ் 4, பக்கம் 244 இன் தொடர்ச்சி)

உலகிற்கு முதல்வன் ஒருவனே

மாணுக்கன் : அடிகள் இதுகாறும் அருளியவற்ருல், 'உலகம் உள்பொருளாயும், முத்தொழிற்படுவதாயும் இருத்தலின். அதனைத் தொழிற்படுத்தும் முதல்வன் ஒருவன் இருத்தல் ஒருதலை' என்பது, பொதுவாக விளங்குகின்றது. ஆயினும், முத்தொழிற்கும் ஒருவனே முதல்வனுதல் எங்ஙனங் கூடும்? மூவர் வேண்டுமன்றோ ?

இன்னும் பெரும்பான்மையாகப் பார்க்குமிடத்து, 'தோற்றம், நிலை, இறுதி' என மூன்று தொழிலே உள்ளனபோலத் தோன்றினும், அவற்றுள் ஒவ்வொன்றன் உட்கூறுகளையும் நுனித்து நோக்கினல், அளவற்ற தொழில்கள் அடங்கியிருத்தல் புலனுகும். 'அத்துணைத் தொழில்களையும் ஒருவனே செய்கின்ருன்' எனக் கொள்வது பொருத்தம் உடையதாகுமோ?

உலகத்தில் பல பெருந்தொழில்களையும் பலர் கூடிச் செய்து முடிக்கின்றனரேயன்றி, ஒருவனே செய்து முடித்தல் இல்லை. ஆதலின், அவற்றினும் மிகப் பெரிய உலகத்தின் தொழில்கள் அனைத்தையும் ஒருவனே செய்வன் என்றலை ஏற்றல் எளிதில் இயலாததாகின்றது. இதற்குத் துணையாக, வேதத்திலும் பல கடவுளர் பேசப்படுகின்றனரன்றி, ஒருகடவுளே பேசப்படவில்லை. ஆதலின், 'உலகிற்கு முதல்வன் ஒருவனே, பலரோ' என்னும் ஐயத்தினை நீக்கியருளல் வேண்டும்.

ஆசிரியர் : நீ கூறியன யாவும் உண்மையே; ஆயினும், ஒன்றை நீ நோக்கவில்லை; அஃதாவது. ஒரு தொழிலைப் பலர் கூடிச் செய்யுமிடத்து, அவர் அனைவரும் ஒருதலைவன்வழி நின்று, அவன் சொற்படியே செய்கின்றனர் அன்றி, அவரவரும் தாம்

தாம் தலைவராய்த் தம்தம் இச்சைப்படியே செய்கின்றாரில்லை. இவ்வாறே உலகத்தைத் தொழிற்படுத்தும் தொழிலில் பலர் கடவுளர் இருப்பினும், அவர் அனைவரும் முதற்கடவுள் ஒருவன் வழிநின்று அவனது திருவுளத்தின்படியே தம்தம் தொழிலைச் செய்வரன்றி, எல்லோரும் முதற்கடவுளர் ஆகார். எனவே, வேதத்தில் பல கடவுளர் கூறப்படுதல் பற்றியும் ஐயம் கொள்ள வேண்டுவது இல்லை யன்றோ? ஆகவே, 'உலகிற்கு முதல்வன் ஒருவனே யன்றிப் பலர் இல்லை' என்று தெளிவாக உணர்க.

மாணாக்கன்: அடிகள் கூறிய முறை பொருந்துவதேயாயினும், வேதம் ஒருவனையே முதற் கடவுளாகக் கூறாமல், ஓரோர் இடத்தில் ஒவ்வொருவனை முதற் கடவுளாகக் கூறுகின்றது. அவை அனைத்தையும் தொகுத்து நோக்கின், முதற் கடவுளரே பலராவர். வேதம் அங்ஙனங் கூறக் காரணம் என்னை?

ஆசிரியர்: ஒரொரு கடவுளை ஓரோர் இடத்தில் முதற்கடவுளாக வேதம் கூறுதல், அவரைப் புகழ வந்த அவ்வவ்விடத்தில் அவரை உயர்த்துக் கூறிய முகமனுரையேயன்றி, 'உலகத்திற்கு முதற்கடவுள் யாவன்?' என்னும் ஆராய்ச்சியிற் புகுந்து, ஒருபடித்தாக முடித்துக் கூறிய முடிவுரையன்று. 'கடவுள் ஒருவனோ, பலரோ?' என்னும் ஐயத்தை நீக்கி ஒருதலையாக முடிவு கூறப் புகுந்த இடத்தில், 'கடவுள் ஒருவன்' என்றே வேதம் கூறுதலைக் காணலாம் ('ஏகமேவாத்விதீயம் பிரஹ்ம, ஏகம சத்' முதலிய வாக்கியங்களைக் காண்க). "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலர் தெளிவுரையும் இதனை நன்கு விளக்குகின்றதன்றோ!

மாணாக்கன்: அவ்வவ்விடத்தில் அவரவரை முதற் கடவுளாக உயர்த்துக் கூறுவதாற் பயன் என்னை?

ஆசிரியர்: உலகில் மக்களது அறிவுநிலை ஒருவகையாய் இல்லாமல் பல்வேறு வகையாய் இருத்தலின், அவரவர் அறிவு நிலைக்கு ஏற்ப, ஒரொரு கடவுளை முதற்கடவுளாகக் கொண்டு வழிபட்டு, அறிவு முதிர்ந்தபின் உண்மை யுணர்தலே அவ்வாறு கூறும் முகமனுரைகட்குப் பயனாகும். முடிந்த உண்மையை முதற்கண்ணே அவர் உணரமாட்டார் என்க.

அழித்தற் கடவுளே முதற் கடவுள்

மாணக்கன் : 'கடவுளர் எண்ணிறந்தவர் சொல்லப்பட்டாலும், முதற் கடவுள் ஒருவனே ; ஏனையோர் அவன் அருள்வழி நிற்பவர்' என்று அறிந்தேன். ஆயினும், 'கடவுளர் பலருள் முதற் கடவுள் யாவன்?' என்று அறிய அவாவும் அவாவுடையேன் ; அவ்வவாவினை நிரப்பியருளல் வேண்டும்.

ஆசிரியர் : ஒவ்வொரு தொழிலையன்றி எல்லாத் தொழில்களையும் செய்ய வல்லவனாய், எல்லா முதன்மையும் உடையவனே முதற்கடவுள் ; அவ்வாறின்றி ஒவ்வொரு தொழிலையே செய்ய வல்லவராய், அவ்வத்தொழிலளவில் முதன்மை பெற்று, அவ்வத் தொழிற்கு மட்டும் உரியராய் நிற்பவர், முதற் கடவுளின் அருள் வழி நிற்கும் தொழிற் கடவுளர்.

மாணக்கன் : அஃது உண்மையே ; 'எல்லாத் தொழில்களையும் செய்யவல்ல எல்லா முதன்மையும் உடையவன் இவன்' என்பதனை எவ்வாறு உணர்வது?

ஆசிரியர் : 'உள்தொழில்கள் பலவாயினும் அவற்றை அடக்கி நிற்கும் பெருந்தொழில்கள் மூன்றே ; அவை படைத்தல், காத்தல், அழித்தல் என்பன' என்பதும், அத்தொழில்களைச் செய்யும் கடவுளர் மூவர்' என்பதும், 'அவருள் ஒருவன் முதற் கடவுள் ; ஏனைய இருவரும் அம்முதற் கடவுளின் அருள்வழி நிற்பவர்' என்பதும் பொதுவாக யாவராலும் சொல்லப்படுவன. ஆயினும், 'முதற் கடவுள் இவன்' என ஒருவனை வரைந்து சுட்டுதலில் மட்டும் கருத்து வேறுபடுவர். அதனை நேரிய முறையில் துணிதலே அறிஞர் கடனாகும்.

'படைத்தற் கடவுள், காத்தற் கடவுள், அழித்தற் கடவுள்' என்னும் மூவருள், அழித்தற் கடவுளே எல்லாத் தொழில்களையும் செய்ய வல்ல எல்லா முதன்மையும் உடையவன் என்பது, பொருந்துமாறு பற்றி நோக்கின், இனிது விளங்குவதாகும்.

எங்ஙனமெனின், படைத்தற் கடவுளும், காத்தற் கடவுளும் தாம்தாம் ஏனை இருவரையும் படைத்தலும் காத்தலும் செய்வர் எனக் கூறின், பொருந்துவதாகும் ; ஆயினும், அவர் ஏனை இருவரையும் அழிப்பர் எனக் கூறின், பொருந்தாது; ஏனெனில், படைப்பவனுக்கும், காப்பவனுக்கும் அழிப்புத் தொழிலோடு எவ்வாற்றானும் இயைபு உண்டாதல் இன்மையின்.

இனி, அழித்தற் கடவுட்கு அவ்வாறின்றி, 'அழிப்புக் காலத்தில் எல்லாப் பொருள்களோடுங்கூட, ஏனை இருவரையும் அழிப்பன்' என்றே கூறுதல் வேண்டும். ஏனெனின், அழிப்பின் இன்றியமையாமை கருதி எல்லாரையும் அழிக்கும் பொழுது, 'ஒருவர் இருவரை, அவன், அழியாது நிறுத்திவைப்பன்' என்றற்கு ஒரு காரணம் இன்மையின்.

எனவே, அழிய வேண்டிய காலத்தில் அழிந்த உலகம், மீளத் தோன்ற வேண்டிய காலத்தில் தோன்றுமாறு அதனைத் தோற்றுவிப்போன் யாவன்? என நோக்குமிடத்து, அழித்தற் கடவுளன்றி அப்பொழுது வேறொருவர் இல்லாமையால், அவனே தோற்றுவிப்பன் என்பது சொல்லாமே அமையும்' இதனையே மெய்கண்டதேவ நாயனார், "ஒடுங்கிய சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை" என்று உரைத்தருளினார்.

இனி, அழித்தற் றொழிலோடு நில்லாமல் படைக்கவும், படைப்புக் கடவுளோடு அழித்தற் கடவுளையும் அழிக்கவும் வல்லவனுகின்ற அழித்தற் கடவுள், தான் படைத்த உலகத்தைக் காக்க வல்லவன் ஆகான் எனக் கூறுதல் அறியாதார் கூற்றாய் முடியும் ஆதலின், 'அழித்தற் கடவுளே எல்லாத் தொழில்களையும் செய்ய வல்ல எல்லா முதன்மையும் உடையவன்' என்பது இனிது விளங்குதல் காண்க.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.

Visited the temple and had a good darshan of the God. The premises are kept clean and it is a model instruction to be copied by others. The staff members are very sincere and they explained the details of each deity.

(Sd.) Rajasaheb - of Ettaiyapuram.
9—3—64.

அவன் இவன்தான்!

ஸ்ரீமதி. சிவ. பிருந்தாதேவி.

மனம் உடையவன் மனிதன். சிந்திக்கவும் சிரிக்கவும் தெரிந்தவன் மனிதன். வாழ்வை வந்தனைக்குரியதாக ஆக்கத் தெரிந்துகொண்டவன் மனிதன்.

வாழ்க்கையைக் கோயிலாகவும், இன்னும் சொல்லப்போனுல் வாழ்க்கையைத் தூய வழிபாடாகவும், தியாகத்தை அதன் அடிப் படையாகவும் அமைத்துக் கொண்டவன் மனிதன்!

''மனிதன் எவ்வழியிலும் சமயச் சார்புடையவனே'' என்பது அறிஞர் கருத்து. சமயத்தைப் புறக்கணித்து மனிதன் செவ்வி தான வாழ்வு வழமுடியாது. மறைமுகமாக வேனும் சமயம் எவ்வாரு மனிதனைச் சார்ந்துதான் இருக்கிறது.

"மனிதனுக்குத் தேவையான அறிவு; ஆழமுடையதாக, அகலமுடையதாக, நுண்ணியதாக இருக்கவேண்டும், அதுதான் பேரறிவு. இவ்வறிவை—மனிதனுக்கு மிகமிகத் தேவையான மெய்யறிவை, மணிவாசகர் ஆண்டவன்பால் கண்டுணர்ந்து,

" ஆழ்ந்தகன்ற நுண்ணியனே "

என்று போற்றிப் புகழ்ந்தார்! முருகனுடைய வேல்; ஆழ்ந்தது; அகன்றது; நுண்ணியது; இவ்வுணர்வுடன் கூடிய நிறையறிவு மக்களுக்குத் தேவையானது என்று மறையுணர்ந்தோர் மகிழ்ந்து கூறுவர்,

நினைக்கத் தெரிந்த நாம். உணர்வுடன் கூடிய உள்ளத்தால் சிந்திக்கினரும்; கடவுள், ஆலயம், கோயில், ஆண்டவன் வழிபாடு, இவைகள் எதற்கு என்று ?

கடந்து உள்நின்று உணர்த்துகின்ற ஒன்றைக் ''கடவுள்'' என்கிரும்.

"ஏகனுமாகி அனேகனுமானவன்" — "அவன்"
"ஏகன் அநேகன்" "அவன்"
"ஒருருவம் ஓர் நாமம் ஒன்றுமில்லாதவன்— "அவன்"
"ஆயிரம் திருநாமம் பாடப் பெறுகின்றவன்—"அவன்"
"ஆணவம் அற்றவன் — "அவன்"
அவனுக்குப் பெயர்—
"நீலமணி மிடற்றொருவன்" (புறநானூறு)
"இறைவன்" (திருக்குறள்)
"ஆண்டவன்" (வழக்கில் உள்ளது)
"ன்" எல்லாம் அவனுக்கு!

ஆணவம் உடைய மனிதனுக்கோ—செட்டியார், முதலியார், அய்யர், அய்யங்கார், கோனர், வேளார், பிள்ளைமார், ... "ர்" எல்லாம் நமக்கு! நாம் கங்கைக்குச் செல்லுகிறோம். அந்த நன்னீர் நம் தலையில் தங்கவேண்டு மென்று, துணியால் துடைக்காமல் வருகிறோம். நாமறியாமலே நீர் வடிந்து தலைமுடி உலர்ந்துவிடுகிறது.

அவனோ, கங்கையைத் தன் தலையில் தாங்கியுள்ளான்—அது அவனால் முடியும் தன்மை

ஒரு சொட்டு கங்கை நீரைக்கூட நம்மால் நிறுத்தி வைக்க முடியாது—இது நமது "முடியாத்தன்மை"

ஆலகால விஷத்தைக் கண்டத்தில் அடக்கியுள்ளான்-விட முண்டகண்டன்-அவன்-இது அவனது அளவற்ற "ஆற்றல்" மாயவரம் லாட்ஜிலே அல்வா சாப்பிடுகிறோம்-வாயினுள்ளே சிறிதுநேரம் வைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். கூறைநாடு போவதற்குள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து "அல்வா" உருவம் இல்லாது வயிற்றுக்குள்ளே புகுந்துகரைந்து விடுகிறது. இது நமது "ஆற்றாமை."

அவன் ஆடுவது பரதம். பாவ, ராக, தாளம், மூன்றும் நிறைந்த பரதத்தை அவன் ஆடுகிறான். ஆதிபரனாட அங்கை அனல் ஆடுகிறது; ஓதுஞ் சடையாட உன்மத்த முற்றாடுகிறது; பாதிமதியாடப் பாரண்ட மீதாடுகிறது; அனைத்தும் கலந்து, நாதமோடாடுகிறான் நாதாந்த நட்டன் அவன்தான் நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதன். அவன் ஆடுகின்ற கூத்தைக் காண்பதற்காகத்தான் மிகப் பெரியவராகிய அப்பரடிகளும், "மனிதப்பிறவி" வேண்டும் என்று பேசுகிறார்.

அணுவினுள்ளே அவனது திருநடனம் அமைந்து கிடக்கின்றது. இன்றைய விஞ்ஞானிகள் அணுவை உடைத்துப் பார்த்தார்கள். பல் கோடிப் பொருள்கள் தெரிந்தன! இதனை நம் மணிவாசகம்

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" .

என்று விவரிக்கின்றது.

உடைத்துப் பார்த்த அணுவினுள்ளே ஒரு பச்சை வளையமும், அதன் நடுவில் ஒரு சிவப்புப் புள்ளியும், அந்தப் புள்ளியின் உள்ளே தாளம் தவறாமல் - கதி தவறாமல் கடிகாரப் பெண்டுலம் போல ஒன்று ஆடுவதையும் கண்டனர், அவைகள் எவையோ என வியந்தனர்.

இந்த வியப்பு, ரசபாவம், கலைஞானம், மெய்யுணர்வு நம் ஞானியர்களை விளக்கங்கூற வைத்திருக்கிறது. இன்று கண்ட விஞ்ஞானக் காட்சிகளை, அன்றே நம் மெய்ஞ்ஞானிகள் மாட்சிமையாகக் கண்டு விண்டனர்.

"ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தையுடையவள்" —திருமூலர்.

நீங்காத பச்சை நிறத்தையுடைய பராசக்தி அணுவினுள்ளே பச்சை வளையமாக நிற்கிறாள். இதுதான் சித்தாந்திகள்கண்ட "அவள்" - விஞ்ஞானிகள் சொல்லுகின்ற "புரோட்டன்" பச்சை வளையத்தினுள்ளே தெரியும் சிவப்புப் புள்ளி "சிவபெருமான்" இச்சிவப்பைத் தேவார ஆசிரியர் - "செம்மேனி எம்மானே' என்கிறார். இதை விஞ்ஞானிகள் இன்று "எலக்ட்ரான்" என்று கூற அன்றே சித்தாந்திகள் "அவன்" என்றனர்.

சிவப்புப் புள்ளியின் உள்ளே, தாளம் தவறாமல் கதி தவறாமல் ஒன்று ஆடிக்கொண்டிருக்கிறதே - அது அம்பலக்கூத்தன் அருளாட்டம்.

நேற்றைய - இன்றைய - நாளைய விஞ்ஞானக் கிளைகள் அனைத்தும் அன்றைய மெஞ்ஞான வித்திலிருந்து விளக்கம் பெறும்பொழுது நம்மிடத்தில் உள்ள மூல பண்டாரத்தை

(அரிய பொக்கிஷம் கருவூலம்) எண்ணி வியந்து - போற்றிப் புகழ்ந்து பாராட்டாதிருக்கமுடியாது.

இந்த எல்லா வகை விரி தொகை களடங்கிய அவனின் பேரருளை, திருஞானசம்பந்தப்பெருமான் ஒரு தேவாரத் திருப் பாட்டிலே இனிமையாக - எளிமையாக - அருமையாகப் பாடு கிறார். நாமும் கருத்தைக்கண்டு களித்து அதன் பொருளை உண்டு மகிழ்வோமே!

"தோடுடைய செவி" - அம்மையின் அருட்பாகம் - இது ஆக்கல் தொழிலை அருமையாக உணர்த்துகிறது.

"விடையேறியோர் தூவெண்மதிசூடி" - இது காக்கும் (காத்தல்) கருணையைக் காட்டுகிறது.

"காடுடைய சுடலைப் பொடிபூசி" - அழித்தருளும் ஆட்சியை அரிதே அறிவுறுத்துகின்றது.

"உள்ளங் கவர் கள்வன்" மறைத்தல் தொழிலின் மாண் பினை இது கூறுகின்றது.

"முனை நாட் பணிந்தேத்த அருள் செய்த" - இது அவனது அருளலை (அனுக்ரஹம்) அன்பாகக் கூட்டுவிக்கின்றது. ஒரே தேவாரம் - உணர்த்துவது ஐந்தொழில்.

"தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானி வனன்றே"

"அவன் இவன்தான்" என்று தோணியப்பரை, ஞானப் பால் உண்ட நற்குழந்தையால், ஞானசம்பந்தமுடைய குழந்தை யால், சுட்டிக்காட்டிச் சொல்ல முடிந்தது.

இதனை நாமும் சிந்தித்தால் மேலும் பல பொருள்கள் உணர லாம். தொடர்ந்து சிந்திப்போம். அவனடி வந்திப்போம்.

குருவருளே குவலயம் காக்கும்!
திருவருளே தெளிவு உணர்த்தும்!!

செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் சிவதல வழிபாடு

தேவாரத் திருப்பதிகங்கள்பெற்ற சிவதலங்களைச் சமயகுரவர் வழி நின்று அன்பர்களோடு சென்று தரிசித்தருளும் நியமம் உடையவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்.

6—4—64 திங்கட்கிழமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அம்மையப்பரின் அருள் விளக்கங்களோடு வித்திலாப்பனை விளங்குவதும் சோழமன்னர்க்கு அருள் வழங்கியதுமான திருப்பனையூர், பைரவர் வழிபட்ட திருப்பயற்றூர், தன்னைப் பயில்வார் பிறவியைப் பாழ்படச்செய்யும் பெருமான் எழுந்தருளி யுள்ள திருப்பள்ளியின் முக்கூடல், இராமபிரான் ஸ்தாபித்து வழிபட்ட ராமகயா, வணிக மங்கைக்குப் பொன்னளித்துக்காத்த பெருமான் எழுந்தருளிய திருச்சிற்றேமம், கோளாயநீக்கும் பெருமானின் திருக்கோளிலி, பொன் பொருள் போகம் அளிக்கும் தியாகேசனின் பூங்கோயில், ஸ்ரீ குருஞானசம்பந்தர்க்கு அருள் புரிந்த பூங்கோயில் சித்தீச்சரம், ஆகிய தலங்களுக்கு எழுந்தருளி விசேஷ அபிஷேக அர்ச்சனை ஆராதனைகள் செய்வித்து வழி பட்டருளினார்கள். திருச்சிற்றேமம் ஆலய நிர்வாகிகள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்புரை யொன்றைப் படித் தளித்தார்கள். ஆலய நிர்வாகிகள் அனைவரும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களை முறையாக வரவேற்று வழிபட்டார்கள். திருக்குவளைத் தியாகேசப் பெருமானுக்கு முசுகுந்தார்ச்சனை நடைபெற்றது. திங்கள் வழிபாட்டுத் திருப்பதிகமாக ''நிறை வெண்திங்கள்'' என்று தொடங்கி 'வாழத்துவார் அல்லல்இன்றி வாழ்வார்' என்று நிறைவுற்றது. அபிராமி அந்தாதி தோத் திரப் பாடலும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே என்று நிறை வுற்றது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளியில் :

இலக்கியமன்ற ஆண்டு நிறைவு விழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் திருவருளால் நடைபெறும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஆண்டு நிறைவுவிழா 9—3—64 திங்கட்கிழமை மாலை மாயூரம் தேசீய உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. எஸ். வி. கல்யாணசுந்தரம் பி. ஏ., பி. டி., அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. அவ்வமயம், அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திரு. தி. வ. காந்திமதிநாதன் எம். ஏ., அவர்கள் சிறப்புரையாற்ற வருகைதந்தார்கள். தலைமைத் தமிழாசிரியை வித்துவான். திருமதி. ப. நீலா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியபின் தலைவரவர்கள் தக்க நல்லுரையாற்றினார்கள். சிறப்புச் சொற்பொழிவாளர், திரு. தி. வ. காந்திமதிநாதன் எம். ஏ., அவர்கள் கல்வியின் மேன்மைபற்றி கருத்துரை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சியும் நிகழ்த்தப்பட்டன. பின்னர், தமிழாசிரியர் வித்துவான், திரு. ச. பாலன் அவர்கள் நன்றியுரை நவின்றபின் நாட்டு வாழ்த்துடன் விழா இனிதாக நிறைவுற்றது.

விளையாட்டுப்போட்டிப் பரிசளிப்பு விழா

4—3—64 புதன்கிழமை யன்று விளையாட்டுப்போட்டிப் பரிசளிப்புவிழா ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. ஆர். வி. கணேசன் அவர்கள் வரவேற்புரையாற்றியபின் மாயூரம் நகராட்சி உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. கணபதி செட்டியார் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். மாயூரம் போலீஸ் டிப்டி சூப்பரின்டெண்டெண்ட் திரு. தருமநாதன் அவர்கள் தலைமை ஏற்று அறிவுரை வழங்கி, பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி வாழ்த்தினார்கள். பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் K. கணேசன் P. E. T. அவர்கள் நன்றிகூறியபின் நாட்டு வாழ்த்துடன் விழா சிறப்புற நிறைவுபெற்றது.

திருநள்ளாற்றில் :

சனிப்பெயர்ச்சி

தருமையாதீனம் திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சோபகிருது ஆண்டு பங்குனித் திங்கள் 22 ஆம் நாள் (4—4—64) சனிக்கிழமை சனிபகவான் மகர ராசியிலிருந்து கும்பராசியில் பிரவேசிப்பதை ன்னிட்டு ஸ்ரீ சனிபகவானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் விடியற் காலை 4 மணி முதலே சிறப்புற நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர் கள். திலதீபங்கள் ஏற்றப்பட்டன. திருக்கோயிலிலும் கட்டளை மடத்திலும், கோளறு திருப்பதிகப் பாராயணம் செய்யப்பட்டது.

சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு கிரகதோஷ நிவர்த்திக்காக அன்பர்கள் பாராயணம செய்து பயன்பெறும் வண்ணம் கோளறு பதிகமும் சனிபகவான் ஸ்தோத்திரமும் அச்சிட்டு வழங்கப்பட்டன. லக்ஷக்கணக்கான மக்கள் வந்து தரிசித்து உய்ந்தனர்.

4—4—64 அன்று காலை முதல் பல ஆயிரக் கணக்கான மக்களுக்கு எண்ணெய் தேய்த்து முழுகுவதற்கு எண்ணெய் ஊற்றப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வஸ்திரதானம், திருக்கை வழக்கம் முதலியன செய்தருளி னார்கள். நண்பகலில் கட்டளை மடத்தில் மாகேஸ்வரபூஜை சிறப்புற நிகழ்ந்தது. அன்று ஏழை எளிய மக்களுக்கு அன்னம் பாலிப்பும் நடைபெற்றது.

திருக்குவளையில் :

முசுகுந்தார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை யாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத் தில் 6—4—64 திங்கட்கிழமை ஸ்ரீ தியாகராஜசுவாமிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளால் முசுகுந்தார்ச் சனை சிறந்த முறையில் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். பிரசாதம் போடப்பட்ட துணிப்பைகள் அன்பர்களுக்கு வழங்கப் பட்டன. அன்பர்கள் பலர் வந்து தரிசித்து உய்ந்தனர்.

ஆதீன தேவஸ்தானங்களில்

பங்குனிஉத்திரப் பெருவிழா

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திரப் பெருவிழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. விழா 18—3—64 முதல் தொடங்கி நடைபெற்றது. 27—3—64 அன்று பஞ்சமூர்த்திகளும் சித்தாமிர்த தீர்த்தத்தில் ருத்ரபாத தீர்த்தம் கொடுக்கும் திருவிழாவுடன் விழா இனிது நிறைவுற்றது. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை நிகழ்ச்சிகளும் நாள்தோறும் மாலை 6 மணிமுதல் தொடங்கி நடைபெற்றன,

18—3—64 புதன்கிழமை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், வித்துவான், திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை M. A., B L., "ஆறுமுகமானபொருள்" என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி, வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், "திருமுகப்பாசுரம்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். 19—3—64 வியாழக்கிழமை திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றது. கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் (திருவையாறு) "வேளூர்த் திருப்பதிகம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் தேவாரவகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இரவு பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்ந்தது.

20—3—64 வெள்ளிக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன். "அற்புதத்திருவந்தாதி" என்ற தலைப்பிலும், திரு. K. சாம்பசிவ முதலியார் B. A., B. T., (திருவாரூர்) "தேவீ மாகாத்மியம்" என்ற தலைப்பிலும், 21—3—64 சனிக்கிழமை முதல்வர் (பொறுப்பு) தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, திருநெறிச்செம்மல், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், "கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி" என்ற தலைப்பிலும்,

பேசினர். தஞ்சை திருமதி. T. R. கமலாமூர்த்தி குழுவினரால் "வலைவீசிய திருவிளையாடல்" கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தப் பெற்றது. 22—3—64 ஞாயிற்றுக்கிழமை புலவர். திரு. N. R. முருகவேள் M. A., M. O. L. (ஆசிரியர். 'திருக்கோயில்' சென்னை) "திருப்பாசுரம்" என்ற தலைப்பிலும், பைந்தமிழ்ச் செல்வர், திரு. ச. சிவகுமாரன் M. A., (சென்னை) "தம்பிரான் தோழர்" என்ற தலைப்பிலும், 23—3—64 திங்கட்கிழமை 'செஞ்சொற்கொண்டல்' வித்துவான், திரு. சொ. சிங்கார வேலன் M. A., (மொழியாராய்ச்சித்துறை, அண்ணமலைப் பல்கலைக் கழ்கம்.) "மெய்ம்மையாம் உழவு" என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர். ஸ்ரீரங்கம் தருமையாதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர சங்கீத சாகித்யவல்லப, கதாரசாஸ் வாதக பாகவதர், எம்பார், ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவின ரால், (ஸ்ரீரங்கம்) "சோமாசிமாறநாயனர்" பற்றி கதாகால க்ஷேபம் நிகழ்த்தினர்.

திருபுவனத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமை யாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தா னத்தில் 18-3-64 புதன்கிழமை முதல் தொடங்கி வெள்ளிக் கிழமை முடிய உள்ள நாட்களில் விழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது 27—3—64ஆம் நாள் ஸ்ரீ சரபர் உற்சவம் மிக்க சிறப் புடன் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள். விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நாள்தோறும் மாலை 6 மணி முதல் தொடங்கி நடைபெற்றன. 18-3-64 புதன் கிழமை கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர். வித்வான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் திருவையாறு. "முதல் திருமுறை" என்ற தலைப்பிலும், 19-3-64 வியாழக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமையாதீனப் புலவர் சிந்தாந்தக்கலைமணி. தமிழ்ப் பேராசிரியர். வித்வான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "இரண்டாந் திருமுறை" என்ற தலைப்பிலும், 20-3-64 வெள்ளிக்கிழமை, வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி (தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி. திருப்பனந்தாள்.) "மூன்றுந்திருமுறை" என்ற தலைப்பிலும். 21-3-64 சனிக்கிழமை வித்வான், திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி எல். (தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணமலைப் பல்கலைக்கழகம்) "நான்காந்திருமுறை" என்றதலைப்பிலும், 22—3—64 ஞாயிற்றுக்

கிழமை, செஞ்சொற் கொண்டல். வித்வான். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ.(மொழியாராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.) "ஐந்தாந்திருமுறை" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். 23—3—64 திங்கட்கிழமை திருமுறை விழாவும், தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும், நடைபெற்றது.

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L., "ஆருந்திருமுறை" என்ற தலைப்பிலும், திருநெறிச் செம்மல். வித்வான். திரு வி. சா. குருசாமி தேசிகர். (தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் (பொறுப்பு), "ஏழாந்திருமுறை" என்ற தலைப்பிலும், சொற்பொழிவாற்றினர்கள். தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்ந்தது. 24—3—64 செவ்வாய்க்கிழமை. திரு. ஆர். வேலாயுத ஓதுவார் குழுவினர் (தருமையாதீனத் தேவாரப்பாடசாலை ஆசிரியர்) "திருநீலகண்டர்" என்னும் தலைப்பில் கதாகால க்ஷேபம நடைபெற்றது.

பேரளம் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திரப் பெருவிழா, 8—3—64 புதன்கிழமை முதல் தொடங்கி 23—3—64 வெள்ளிக்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் முதலியனவும் நடைபெற்றன.

18—3—64 புதன்கிழமை கதாகாலக்ஷேபம் தருமையாதீனத் தேவார பாடசாலை ஆசிரியர். திரு. ஆர். வேலாயுத ஓதுவார் குழுவினரால் "குங்குலியக்கலயர்" பற்றி நிகழ்ந்தது. 19—3—64 வியாழக்கிழமை திருக்கருகாவூர், தொண்டர், திரு. கோ. சிவஞானம் "சேக்கிழார் செந்தமிழ்" என்ற தலைப்பிலும், 20—3—64 வெள்ளிக்கிழமை திருவையாறு கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் "சுந்தரர் செந்தமிழ்" என்ற தலைப்பிலும், 21—3—64 சனிக்கிழமை திருவையாறு செய்தியாளர், திரு. ஜி. தனவேலுப் பிள்ளை "அப்பர் அருள்மொழி" என்ற தலைப்பிலும், 22—3—64 ஞாயிற்றுக்கிழமை நாகை, தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர்.

தருமையாதினத் தமிழ்ப் புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் "திருநெறிய தமிழ்" என்ற தலைப்பிலும், 24—3—64 செவ்வாய்க்கிழமை தருமையாதினப் பல்கலைக் கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப்புலவர்.சித்தாந்தக் கலைமணி, வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "பொன்வண்ணத்தந்தாதி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

•

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

பெரியபுராண விரிவுரைத் தொடக்க விழா

சென்னை தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதின மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 9—3—64 மாலை பெரிய புராண விரிவுரைத் தொடக்க விழா, இந்து அறநிலைய ஆணையர் திரு. M S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. திரு P. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினர். தலைவர் தமது தலைமையுரையில், 'பக்திச் சுவை, இலக்கியச் சுவை, காவியச் சுவை முதலிய பல சுவை நிறைந்த நூல் பெரியபுராணம், செயற்கரிய செயல் செய்தவர்களே பெரியவர்கள். செயற்கரிய செயல்களைச் செய்யாதிருப்பவர்களே சிறியவர்கள் என்றும் வள்ளுவர் கூறுகிறர்; செயற்கு அரிய செயல்களைச் செய்த பெரியவர்களது வரலாற்றைச் சுவைபடக் கூறுவதால் இந்நூல் பெரியபுராணம் எனப்பெயர் பெற்றது, எக்குலத்தைச் சேர்ந்தவர்களாயினும எத்தொழில் புரிவோராயினும் அவரவர்க்கேற்ப அறவாழ்வு மேற்கொண்டால் ஆண்டவன் அருள்பெறலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக் விளங்குவது பெரிய புராணம்' என்று குறிப்பிட்டார்கள்.

விரிவுரை விழாவைத் தொடங்கிவைத்த திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் பேசும்போது, 'பல்வேறு வாழ்க்கை முறையில் உள்ளவர்கள் பெரிய புராணத்தில் பேசப்படுகின்றனர் என்ருலும் குறிக்கோள் அனைவருக்கும் ஒன்றே, அறநெறி வாழ்வும், ஆண்டவனிடம் அசையாத நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்களே அனைவரும். சிலர் எளிய செயலால் இறையருள் பெற்றனர். சிலர் வலியசெயலால் இறையருள் பெற்றனர், ஆனலும் அருளில் வேறுபாடு காட்டப்படவில்லை. இம்மாதிரி

பல்வேறு வகைப்பட்ட வரலாறுகளை இணைத்துக்கூறும் நூல் உலகில் இல்லை. தமிழுக்கே, தமிழகத்துக்கே, சைவத்துக்கே கிடைத்துள்ள தனிச் சிறப்பு இது' என்று குறிப்பிட்டார்கள். புராணவிரிவுரையை ஞாயிறுதோறும் நடத்தவிருக்கும் சித்தாந்த வித்தகர், கயப்பாக்கம், திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் விரிவுரையைத் தொடங்கிப் பாயிரத்தில் சில பாடல்கட்கு விளக்கம் தந்தார்கள். "பெரியபுராாணப் பெண்மணிகள்" என்பதுபற்றிப் புதுக்கோட்டை,திருமதி. சிவ. பிருந்தாதேவியவர்கள் பேசினார்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள். திரு. P. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினார்.

மகாசிவராத்திரி விழா

சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் 12—3—64 மாலை 7 மனிக்கு மகாசிவராத்திரி விழா சென்னைச் சட்டமன்ற சபாநாயகர் கனம் S. செல்லபாண்டியன் அவர்கள் தலைமையில் சிறப்பாகக்கொண்டாடப்பெற்றது. "திருக்கோயில்" ஆசிரியர் திரு. N. R. முருகவேள் அவர்கள் "சிவராத்திரிச் சிறப்பு" என்பதுபற்றி அரியதொரு விரிவுரை யாற்றினார்கள். உடையாளூர், வித்துவான். திரு. அ. இராஜகோபால சர்மா அவர்கள் "கண்ணப்பர் சரித்திரம்" என்பது பற்றி இன்னிசைக் கதாகாலட்சேபம் நிகழ்த்தினார்கள். திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினார்கள்.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசாரமும், வழிபாடும் சென்னை. ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலயத்தில் 22-3-64, மாலை 4 மணி முதல் 8 மணிவரை சிறப்பாக நடைபெற்றன. வழிபாட்டுக் குழுவினரை அறங்காவலர்களும், சிவாசாரியர்களும் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்று அபிஷேக ஆராதனை வழிபாடு. பிரசாரம் முதலியவற்றை உடனிருந்து நடத்தி வைத்தனர். வழிபாட்டுக் குழுவிலுள்ள தாய்மார்கள் கோயிலைக் கூட்டிக் கோலமிட்டு அலங்கரித்தனர். குழுவினர் சார்பில் அபிஷேக ஆராதனை சிறப்பாக நடைபெற்றன. சிவபுராணம் முதலிய துதிப்பாடல்களை ஓதிக்கொண்டே மாடவீதி வலம்வந்து முறையாகத் திருக்கோயிலில் வழிபாடு புரிந்தனர். வழிபாட்டின்

பின்னர், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இறைவன் உயிர்கட்குச் செய்துள்ள பேருபகாரத்தை நினைந்து உருகும் மனம் உடையவர்கட்கு நோய்வராது என்றும், இதனை "உருகும் மனம் உடையார் தமக்கு உறுநோய் அடையாவே" என்று சம்பந்தர் அண்ணுமலைப் பதிகத்தில் கூறியுள்ளார் என்றும் கூறினார்கள். அருணுசலேசுவரர் ஆலயத்தைத் திருப்பணி செய்ய முன்வந்துள்ள அறங்காவலர்களின் பண்பைப் பாராட்டி அனைவரும் இதில் பங்குகொள்ள வேண்டிய அவசியம்பற்றி விளக்கிப் பேசினார்கள். திரு. என். டி. கிருஷ்ணசாமி முதலியார் வழிபாட்டினுல் விளையும் நன்மை பற்றி விளக்கினார்கள். திரு. பி. சுவாமிநாதன் வழிபாட்டிலும், பிரசாரத்திலும் தேவாரம் ஓதி மகிழ்வித்தார். அறங்காவலர்கள் நன்றி கூறினார்கள்.

வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

16-3-64, கிருத்திகைப் பிரசாதம் 18-3-64, மாலை 7 மணிக்கு சென்னை, தருமை யாதீன சமயப் பிரசார நிலையத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில், பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டது. வித்துவான் திரு ந. இராமலிங்கம் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ் முதலிய ஓதிப் பிரார்த்தனை நிகழ்த்தினர். கிருத்திகைப் பிரசாதம் பெறும் உறுப்பினர்களும்; அன்பர்களும் வழிபாட்டில் கலந்து பிரசாதம் பெற்றுச்சென்றனர், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரையும் வாழ்த்துரையும் கூறி, அடுத்து 15—4—64ல் வரும் கிருத்திகை - நிலைய அன்பர்கள் உபயமாக நடைபெறும் என்பதையும் தெரிவித்தார்கள்.

குமரகுருபரன்

ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்.

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

A. SENAPATHI M. L. A., DHARAPURAM.
Pattakkarar Nilayam. 5—4—64

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி தரிசனத்தின்போது, சந்நிதானம் அருள்நிழல் தந்து அருளாசி வழங்கிய பெரும் பேற்றுக்கு என்ஞான்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம், சந்நிதானத்தின் சீர்மிகுந்த தெய்வப்பணிகள், சைவத்தினையும்; தமிழையும் காத்துவருகின்றன என்பதைக் கண்டும் கேட்டும் களிபேருவகை எய்தினேம். சந்நிதானத்தின் மேற்பார்வையிலுள்ள சீர்காழி, திருக்கடவூர் ஆகிய இரு தலங்களில் வழிபாட்டுக்குச் சென்றிருந்தபோது அவண் நிகழ்ந்த நிர்வாகத் திறனும் அறப்பணிகளின் மாண்பும் நன்கு புலனாயின.

அவ்விரு ஆலயங்களில் திருத்தொண்டாற்றும் அணுக்கத் தொண்டர்களும் அறநிலையப் பணியாளர்களும் வழிபாட்டுக்கு வருவோரின் மனத்தை ஈர்த்து வழிபாடுசெய்து வைக்கும் பண்பு குறிப்பிடத்தக்கதொன்றாகும். இதுபோன்ற அறப்பணிகள் பல்லாண்டு தொடர்ந்து இவ்வுலகிற்குக் கிடைக்க குருமகாசந்நிதானத்தில் பொலிவோடு விளங்க நஞ்சுண்டகண்டனை நெஞ்சார வழுத்துகின்றேன்; சந்நிதானத்தின் அருளாசிவேண்டும்.

அன்பன்,
(Sd.) A Senapathi

மதிப்புரை

கிள்ளைவிடு தூது

திருக்கேதீச்சரநாதர் மீது கவிஞர் திரு. சி. இ. சதாசிவம் பிள்ளையவர்கள் பாடியுள்ள இப்புதிய இலக்கியம் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட ஏழாவது வெளியீடாக வந்துள்ளது. 105 கண்ணிகளைக் கொண்ட இந்நூலில் கிள்ளையைத் திருக்கேதீச்சுரரிடத்துத் தூது விடுகின்றார் இவ்வாசிரியர். குன்றாத பக்தியும், குறையாத புலமையும் இந்நூலால் வெளியாகின்றன. பா நடை கைவந்த நன்னடையாக உள்ளது. சீரிய உவமைகளை ஆங்காங்குக் காணலாகின்றது. தோத்திர சாத்திரக் கருத்துக்கள் ஆங்காங்குத் துலங்குகின்றன. [எ-டு: கண்ணி 45, 49, 100 நோக்குக] இந்நூலைப் படிப்போர் கிள்ளையோடு தாமும் கேதீச்சரம் சென்று வீதிவலம் வந்து தீர்த்தமாடி இறைவனை வணங்கினாற்போல் உணர்வர். ஆசிரியரின் தொண்டு பாராட்டிற்குரியது. அன்பர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதிப் பெறலாம்:-

திரு. சி. இ. சதாசிவம் பிள்ளை, "அன்பகம்" புங்குடு தீவு, இலங்கை; [விலை 50 சதம்] — சொ. சிங்காரவேலன்.

ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள்.

திருமுறை இன்னிசைவாணர், வேலூர். க. சோக்கலிங்கம்.

இராகம் - அடாணு] [தாளம் - ஆதி

பல்லவி

சச்சிதானந்தர் திருத்தாளே நெஞ்சமே நீயே
சதா நினைந் திடுவாயே — தருமை நகர் (சச்சி)

அனுபல்லவி

பச்சைமாலயன் முதலாம் பலர்பணியும் ஆலவாய்ப்
பரமன் திருவடியே சிரமேற் கொள்ளும் நமது (சச்சி)

சரணம்

தந்திரமாய் வந்துபசி தாளேன் எனஅரசன்
தான்புக்ல அவன்பசியே தணித்துப் புகழ்கொண்டே
சிந்தைமகிழ் வோடுவந்த கந்தப்பர் தொண்டேற்று
திருமறைக் காடுறையிறைவன் திருவடியே சேவிக்கும் (சச்சி)

மாறுபட்ட மனமுடையார் மதிமயக்கம் தீர்த்து
மந்திரமாம் ஐந்தெழுத்தைச் சிந்தையில் தியானித்து
தேறும்வகை சிறிதுமிலா வஞ்சர்தந்த நஞ்சினையே
தெள்ளமுதாய் உண்டுசிவன் திருவருளில் மகிழும் (சச்சி)

"ஞானசம்பந்தம்"

கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

செயலாளர்.

" ஞானசம்பந்தம் " காரியாலயம்.
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்.
தஞ்சை மாவட்டம்.

எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

(குரோதிஸூ சித்திரைமீ 1௳ முதல் 31௳ முடிய)

(13—4—64 முதல் 13—5—64 முடிய)

குரோதி வருஷம் சித்திரை மாதம் மேஷ சங்கிரமணி பிரவேசக்காலபலம் சகலலோகத்துக்கும் சமஸ்த மங்களத்தையும் உண்டுபண்ணி உலகில் அமைதியையும், தனதான்ய விருத்தியையும், ஆரோக்கியத்தையும், அவரவர்கள் தங்கள் கடமையை உள்ளன்போடு செய்துகொண்டு லோக க்ஷேமத்திற்குப் பாடுபடும்படியாக சர்வேசுரன் அருள்புரிவாராக.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும் ஆரோக்கியம் உண்டுபண்ணும், தனதான்ய சமிருத்தியும் நூதனமாக உத்தியோக லாபமும் தரும். சனி, செவ்வாய், சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.

கார்த்திகை நக்ஷத்திரம் 2-3-4, பாதங்களும், சுபத்தை உண்டுபண்ணும் உத்தியோக உயர்வு ஏற்படச்செய்யும், குடும்பம் ஓங்கும், ரோகிணி நான்கு பாதங்களும் மிச்சிர பலனைத் தரும், அதிக சிலவினங்கள் ஏற்படும். மிருகசீரிஷம் 1-2 பாதங்கள் இடம்மாறி உத்தியோக லாபத்தைத் தரும் சஞ்சாரபலன் அதிகமாகும். புதன், வியாழன், சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் இல்லறசுகம் ஓங்கும். நஷ்டமான பொருள் தானாக வந்துசேரும். வியவகாரம் ஜெயிக்கும் உலக பிரசித்தி ஏற்படச்செய்யும், தெய்வ பலம் ஓங்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.

புனர்பூசம் 4ம் பாதமும் பூசம் முதல்பாதமும், விசேஷ நன்மையை உண்டுபண்ணும், வித்தியா விருத்தியாகும். தொழில் ஓங்கும், பூசம் 2-3-4 பாதங்களும் ஆயில்யம் நான்கு பாதங்களும்; மிச்சிரபலனைத் தரும், எல்லா காரியங்களும் தவக்கத்துடன் பூர்த்தியாகும். சுபவிரயங்கள் ஏற்படச்செய்யும். கிரய விக்கிரயங்கள் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் பெரியோர்களின் அன்பினால் துன்பம் நீங்கி சுபம் உண்டுபண்ணும்; தொழில் ஓங்கும். நல்ல வாழ்வு உண்டுபண்ணும். புதன் வியாழன் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் சுப சந்தோஷங்களை உண்டு பண்ணும். ஆரோக்கியமும் சுகவாழ்வும் உண்டாகும், தெய்வ பலம் பிரகாசிக்கும்; மாத மத்தியில் சிற்சில க்லேசங்கள் உண்டு பண்ணி தெய்வபலத்தால் விலகும். உலகில் புகழ் ஓங்கச் செய்யும். சனி ஞாயிறு சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி 9 பாதங்களும் சுபமே யாகும், அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். நஷ்டமான பொருள் தானாக வந்து சேரும், உத்தியோகமும் தொழிலும் ஓங்கச்செய்யும், தெய்வபலம் பிரகாசிக்கும். கீர்த்தி பத்திரம் கிடைக்கச்செய்யும் புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதமும், அனுஷம் நான்கு பாதங்களும் மிச்ர பலனைத் தரும், சுகதுக்கமும் வரவு செலவும் சமமாகும். கேட்டை நான்கு பாதங்களும் இல்லற சுகத்தை ஓங்கச்செய்யும். கடன் தொல்லை நீங்கி சுகம் உண்டுபண்ணும், தெய்வபலம் முன்னிற்கும். ஆரோக்கியம் உண்டாகும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும், பூராடம் நான்கு பாதங்களும் மிச்ர பலனைத் தரும். வரவு செலவு சமமாகும். ஆனாலும் சுப சந்தோஷங்களையும், குடும்ப சுகத்தையும் உண்டுபண்ணும். வம்ச விருத்தியாகும். உத்திராடம் முதல் பாதம் ஆரோக்கியத்தைத் தந்து கிரஹசுகபோகங்களை விசேஷமாய் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகர ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வம்ச விருத்தி ஏற்படும். புத்திராதிகளால் சுப சந்தோஷங்களை உண்டு பண்ணும். தனதான்யப் பெருக்கும், தொழிலும் ஓங்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி - $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் சுபம் உண்டுபண்ணும். தன தான்யப் பெருக்கும் நூதன வஸ்திராபணச் சேர்கைகளும் தரும். சுப விரயம் ஏற்படச் செய்யும் கீர்த்தி ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் உலக பிரசித்தியைத் தரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். சத்ரு நாசம் ஏற்படச் செய்யும். உத்தியோக லாபமும், தொழில் ஏற்றமும் ஏற்படும். சகல காரியங்களும் வெற்றி அடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி குரோதி வருஷ ஆரம்பம் தெய்வ சக்தியால்தான் உலகம் சுபிக்ஷம் அடைய வேண்டும். உலக நிர்வாகிகளும், தர்மிஷ்டர்களும், பேரியோர்களும் உலக க்ஷேமத்துக்காகவே சதா பாடுபட்டுக்கொண்டு சகல மக்களும் ஆபத்து இல்லாமலும், துர்பிக்ஷம் இல்லாமலும் சுகஜீவனம் ஏற்பட்டு இயற்கைக் கோளாறுகள் ஏற்படாமலும், சத்ருக்களுடைய பயமில்லாமலும், கலகமில்லாமலும் இருக்க எல்லோரும் ஒத்துழைத்து உலக க்ஷேமத்துக்காகப் பாடுபட சமஸ்த மங்களமும் உண்டாகும்.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமானதும்

திருஞானசம்பந்தர் திருமணக் கோலத்துடன் சிவஜோதியில் கலந்தருளியதுமான

ஆச்சாள்புரம் (திருநல்லூர்பெருமணம்)

ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்

திருவெண்ணீற்றுமையம்மை சமேத

ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமிக்கு

விநாயகர் முதலிய பரிவாரங்களுடன்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

மகா கும்பாபிஷேகம்

24—4—64 வெள்ளிக்கிழமை: அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை முதலியன.

26—4—64 ஞாயிற்றுக்கிழமை: யாகசாலாப் பிரவேசம், யாகபூஜை ஆரம்பம்.

குரோதிஆண்டு சித்திரைத்திங்கள் 17-ம் நாள் (29—4—1964) புதன்கிழமை காலை மணி 8-5க்கு மேல் 10-38க்குள் மிதுனலக்கினத்தில் மகா கும்பாபிஷேகம் மகாபிஷேகம்.

இரவு திருஞானசம்பந்தருடன் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா.

குறிப்பு:- இத்தலம் கொள்ளிடம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே மூன்றுகல் தொலைவில் உள்ளது, பஸ் வசதி உண்டு. கும்பாபிஷேகத்தைக் குறித்து வேதசிவாகம பாராயணம் திருமுறை மாநாடு, இன்னிசையரங்கு முதலியன நடைபெறும்,

வெளிவந்துவிட்டது !

உ

சிவமயம்

ஆறாந்திருமுறை

(குறிப்புரையுடன்)

திருத்தருமையாதீனத் திருமுறை வெளியீட்டு வரிசையில் திருநாவுக்கரசர் தேவாரத்தில் திருத்தாண்டகத் தொகுப்பாகிய ஆறாந்திருமுறை சிறந்த குறிப்புரை ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் 1026 பக்க அளவில் வெளிவந்துள்ளது. குறிப்புரையில் திருத்தாண்டகங்களின் அரிய பகுதிகளுக்கு விளக்கங்களும், ஆராய்ச்சிக்கட்டுரைகளில் அப்பர் தேவாரம் முழுவதிற்குமான குறிப்புக்களும் அமைந்துள்ளன. குறிப்பிடத்தக்க சில படங்களும் ஆங்காங்கு உள்ளன. நல்ல தாளில் அழகிய முறையில் அச்சிடப்பட்டுக் கண்ணைக் கவரும் காலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. டிம்மி 1X8 சைஸ். விலை ரூ. 8—00. தபால் செலவு ரூ. 2—75.

கிடைக்குமிடங்கள் :-

1. காஷியர்,
   தருமையாதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. டிரஷரர், ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம்,
   வைத்தீஸ்வரன்கோயில், தஞ்சாவூர் ஜில்லா.
3. காஷியர், ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்,
   சீர்காழி, தஞ்சாவூர் ஜில்லா.
4. காஷியர், ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம்.
   திருபுவனம், திருவிடைமருதூர் வழி, தஞ்சாவூர் ஜில்லா.
5. காஷியர், ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருப்பனந்தாள், கும்பகோணம் வழி, தஞ்சாவூர் ஜில்லா.
6. காஷியர், ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானம்,
   திருக்குவளை, நாகப்பட்டினம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா.

குறிப்பு :- தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும். தபால் செலவு தனி.

Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
...nasambandam press, Dharmapuram (Mayuram) 10-4-64.